REGISTERED No. M. 6165. அணா 2

82

பத்ஹுல் இஸ்லாம்

FATHHUL-ISLAM

FILED BY THE REGISTRAR OF BOOKS
8 JAN 1954
MADRAS

82
1-54

மாத பத்திரிகை

டிசம்பர் 1953.

விஷயம்.	பக்கம்.
வறுமையும் செல்வமும் (எம். கே. எ. எஸ். அஹ்மத் மீரா)	1
ஸல்வாத்தின் சிறப்பு (மேல்விஷாரம் எ. எ. ரஜாக்பாகூதா கமல்)	4
மாயமாய் மறைந்த மங்கை (தொடர் கதை)	9
தொழுகையின் மகாத்மியம்	18
ஸிராஜுஸ் ஸாலிகீன்	21
நல்லுபதேசம் (அய்யம்பேட்டை எஸ். அப்துர் ரஜாக் ஸாஹிப்)	25
விகடத் துண்டுகள்	32

[illegible]ஸ்லாம் ஆபீஸ் :
[illegible]20, ஹைரோட், திருவல்லிக்கேணி,
மதறாஸ் 5.

JC
O7M211, M24F5
M53
187025

பத்ஹுல் இஸ்லாம்.

சந்தா விபரம்: இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு

வருஷ சந்தா	ரூ.	1–8–0
தனிப் பிரதி	அணா.	2
மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா	ரூ.	2–0–0

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
பத்ஹுல் இஸ்லாம்,
20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

அல் ஆரிபு பில்லாஹி காமில் ஒலியுல்லாஹ்

ஹலரத் மௌலானா ரூமி அவர்களின் ஜீவிய சரித்திரம்.

இந்நாயகம் மஹா மேதாவிகளுக்கிடையில் புகழ் பெற்ற மெஞ்ஞான அருள் நிறைந்த நூலான மஸ்னவீ ஷரீபின் கிரந்தகர்த்தாவாவர். இந்நாயகத்தின் ஜீவிய சரித்திரத்தை ஒவ்வொரு முஸ்லிமும் அறிந்து அவர்களைப் பின்பற்றி நடந்து ஜெயம் பெறுவதற்கு உதவியான நூல்.

இதன் விலை அணா. 15

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

பத்ஹுல் இஸ்லாம்.

டிசம்பர்—1953.

REGISTRAR OF NEWSP... 8 JAN 1954 ...DRAS

"வறுமையும் செல்வமும்"

(எம். கே. ஏ. எஸ். அஹ்மத் மீரா. சீருடையபுரம்)

"வறுமை எனக்குப் பெருமை" என நவின்றுள்ளார்கள் நாயகமவர்கள். வறுமை என்று சொல்லும்போதே ஒரு சிலருக்கு—இல்லை, பெரும்பாலோருக்கு ஒருவித அதிர்ச்சி ஏற்பட்டுவிடும்; இது மனித இயற்கை. வறுமையை விட்டும் காத்தருள் என்று இறைவனிடம் வேண்டுகோள் விடுப்பதைத்தவிர்த்து, 'வறுமைதான் எனக்குப் பெருமை' என்று உலக சிரேஷ்டர் உத்தமநபி (ஸல்) கூறியுள்ளார்களென்றால் இதிலோர் ஆழ்ந்த உயரிய கருத்திருந்திடல் வேண்டும்.

இறைவன் ஒருவருக்கு நிறைந்த செல்வத்தைச் செறிந்துள்ளான். இன்னமொருவனுக்கு பரம தரித்திரத்தை கொடுத்துள்ளான். இருவிதமாக இருவரையும் சோதிக்கவே இவ்வாறு செய்கிறான். இவர்களின் செயலை எப்பொழுதும் கண்ணுற்றவனாய் இருக்கிறான், என்பது அறிந்தவர்கள் யாவருக்கும் தெரிந்ததே!

பண்புமிகுவுள்ள ஒருவனிடத்தும் செல்வம் வந்துள்ளதும், அவனுக்கு நல்லது செய்ய நினைப்போ நேரமோ இல்லாமல் போய்விடுகிறது. இதுதான் செல்வத்தின் சக்தி! செல்வச் செருக்கு சேர்ந்தவுடன்(பெரும்பாலனருக்கு) அநியாய அக்ரமச் செயல்களெல்லாம் அழகு நிறைந்த கண்காட்சியாகக் கொண்டு நடக்கிறார்கள். மேற்கூறப்பட்ட ஆணவச்செயல்களை எல்லாம் அகமகிழ்ச்சியுடன் செய்ய தூண்டுவது இச்செல்வத்தின் செருக்கேயாகும். இத்தகைய விஷயங்களை ஆகம நூல்களின் வாயிலாகவும் அனுபவங்கண்ட உண்மையாயும் அறியக்கிடக்கிறது என்பது வெள்ளிடைமலை. ஏழைகளைவிட பணக்காரர்களின் கடமைகளதிகமுண்டு. ஆனால் கடமையை நிறைவேற்றுவதில் ஏழைகளை விட மிகக்குறைவாகவேதான் யிருக்கமுடிகிறது செல்வந்தர்கள்.

இதே நிலையில், தரித்திர திசையிலே தத்தளித்துக் கொண்டிருக்கும் ஓர் ஏழை, அவனிடத்திலே பொருளில்லாத வறுமை ஏற்று இருப்பதால், ஆணவம், பெருமை, திமிர், போன்ற தீய இனங்கள் தலை காட்டமுடிய வில்லை. இயற்கையிலேயுள்ள தீய செயல்களுங்கூட இவ் வறுமையால் இவனிடமிருக்க முடியாது போய்விடுகிறது. இதற்கு மாறாக சாத்வீகம், தன்னடக்கம், தன்னம்பிக்கை, போன்ற உயர் குணங்கள் உதிக்கத் தலைப்பட்டு விடுகின்றன. ஏழ்மையின் காரணமாக அவனுக்குரிய கடமையை செவ்வனே செய்து முடிக்கவியலுகிறது. எனவே "வறுமையைப்போல் அறிவையுண்டாக்கும்படிப்பு வேறெதுவுமில்லை" என்கிறார் ஓரரும்பெரு மறிஞருங்கூட. ஆகவே செல்வச் செருக்கால் சிரழிந்து போவோரே மிகமிகவுண்டு என்பதை எண்பித்து காட்ட உலகப் பொதுமறையாம் திருக்குர்ஆன் தெரியவைப்பதை ஈண்டு கவனிப்போமாக!

நபியே இருமனிதர்களை நீர் அவர்களுக்கு உதாரணமாகக் கூறும். இருவரில் ஒருவனுக்கு இரு திராட்சை தோட்டங்களைக் கொடுத்தோம். அவ்விரண்டைச் சூழவும் பேரிச்சமரங்களையாக்கினோம். அவ்விரண்டிற்கும் மத்தியில் தானிய வயல்களையும் அமைத்தோம். அவ்விரண்டு தோட்டங்களும் அதனதன்பலனை யாதொரு குறைவுமின்றி கொடுத்து கொண்டிருந்தது. அவ்விரண்டிற்கும் மத்தியில் ஒரு நதியும் ஓடச் செய்தோம்.

அவனிடத்தில் இவைகளன்றி வேறுபல கனிமரங்களும் இருந்தன! இத்தகைய நிலைமையில் ஒருநாள் அவன் தன்னுடன் பேசிக் கொண்டிருந்த தன் சினேகிதனை நோக்கி, "நான் உன்னை விட அதிக பொருளுடையோன்; ஜனத்தொகையிலும் நான் உன்னை மிகைத்தவன்!" என்று கர்வத்துடன் கூறினான். பின்னர் அவன் தன் தோப்புக்குள் நுழைந்து அளவுக்கு மீறிய அகமகிழ்ச்சியின் காரணமாக தனக்குத்தானே தீங்கிழைத்துக்கொண்டு "இவை ஒரு காலத்திலும் அழிந்து விடுமென நான் நம்பவில்லை. மறுமை ஏற்படும் என்றும் நான் நம்பவேயில்லை" என்றும் கூறினான் (பணத்தின் செழிப்பால்!)

அதற்கு அவனிடம் பேசிக் கொண்டிருந்த ஏழைச் சினேகிதன் அவனை நோக்கி, "உன்னைச்சிருஷ்டித்தவனையே நீ நிராகரிக்கிறாயா? நிச்சயமாக அந்த அல்லாஹ்தான் என்னைச்சிருஷ்டித்து போஷிப்போன் என்று, நான் உறுதியாக நம்பியிருக்கிறேன். அன்றி உன் தோட்டத்தில் நுழைந்தபோது இவையாவும் அல்லாஹ் தன்னருளால் நாடி தந்ததே. அல்லாஹ்வின் உதவியின்றி நாம் ஒன்றும் செய்து விட முடியாது என்று நீ கூறி யிருக்க வேண்டாமா? பொருளிலும் சந்ததியிலும் உனக்கு நான் குறைந்தவனாக இருப்பதாக நீ கண்டபோதிலும், உன்னுடைய தோட்டத்தை விட மிக மேலானதை என் இறைவன்

187025
சென்னை-600 005.

எனக்குக் கொடுக்கவும், உன் நன்றி கெட்டதன்மையின் காரணமாக உன் தோப்பின்மீது யாதொரு ஆபத்தை வானத்திலிருந்து இறக்கி அதிலுள்ளமரஞ் செடி கொடிகளெல்லாம் அழித்து அதனை வெட்ட வெளியாக்கவும் (என் இறைவன்) செய்துவிடக் கூடும்" (என்று வருத்தத்துடன் கூறிச் சென்றான்).

அவர் கூறியவாறே அவனுடைய விளைப் பொருள்கள் யாவும் அழிந்து, அதற்காக அவன் செலவு செய்ததைப் பற்றி தன் இருகைகளைப் பிசைந்து கொண்டு, அத்தோட்டத்தின் மரங்கள் செடிகள் முதலியயாவும் அடியுடன் சாய்ந்து விட்டதைப் பற்றி "என் இறைவனுக்கு நான் எவரையும் இணையாக்காதிருக்க வேண்டாமா?" என்று சொல்லும்படியும் நேரிட்டது.

ஆகவே பொருளும் மக்களும் இவ்வுலக வாழ்க்கைக்குறிய அலங்காரங்களே (யன்றி நிலை யானவைகளன்று) என்றுமே நிலையான நற்கருமங்கள் தான் உம் இறைவனிடத்தில் நற்கூலியையும், நன்னம்பிக்கையும் கொள்வதற்கு மிக்க மேலானவையாயிருக்கும்.

(குர்ஆன்–அத் 18, 32—46 வரை)

புதிய பதிப்பு [ஹதீதுகள்] புதிய பதிப்பு

நபிநாயகத்தின் திருவாக்கியம்.

மிஷ்காத்தே ஷரீபின் மொழி பெயர்ப்பு

(முதற் பாகம்)

இதில் நமது நாயகம் முஹம்மது முஸ்தபா றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய ஹதீதுகள் அடங்கி இருக்கின்றன.

முதற்பாகம் 930 ஹதீதுகளை உடையதாய் இருக்கிறது, 8 அங்குலம் நீளம், 5½ அங்குலம் அகலமுள்ள புஸ்தகத்தில் 288-பக்கங்களை கொண்டது. கலிகோ பைண்டு செய்யப்பட்டுள்ளது. இதன் விலை ரூபா. 2–4–0

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

ஸலவாத்தின் சிறப்பு.

(மேல்விஷாரம் எ. எ. ரஜாக்பாக்ஷா கமல்)

“முஹம்மது முஜ்தபா அஹமது முஜ்தபா ரஸூல் ஸல்லல் லாஹூ அலைஹி வஸல்லம்”

திரு தூதரின் இந்நாமத்தைக் கேட்டதும் அறிவுள்ள முஸ்லிம்கள் அவர்கள் மீது ஸலவாத்து ஓதி சுவர்க்கலோகத்தில் தனக்கும் ஒரு தலத்தை ரிஜிஸ்டர் செய்து கொள்கிறார்கள். இது நபிநாயகம் அவர்கள் பொருட்டால் முஸ்லிம்களுக்கு கிடைக்கும் சகாயமான புண்ணியம். ஸலவாத்து ஓதுவதற்காக நேரத்தின் கட்டுபாடும், வுலு உடன்தான் ஓதவேண்டுமென்ற நிர்பந்தமுமில்லை. வெறும் நாவு அசைக்கவேண்டும், நாவு அசைத்து நரகத்தின் கதவை மூடிவிடலாம்.

மேல்நாட்டு கொள்கை என்னும் மலைபாம்புடன் நாகரீகமென்ற நாகப்பாம்பும் சேர்ந்து பார்க்க சகிக்காதவகையில் பல விபரீத லீலைகள் புரிந்து பாழடைந்து வரும் இந்நாளில், ஆண்டவன் கிருபையாலும், நபிகள் திலகம் அவர்களின் பொருட்டாலும், தாழ்மையான தப்லீக் ஜமாஅத்தின் பரக்கத்தாலும் அநேக முஸ்லிம்கள் உலகத்தின் ஊதாரா வாழ்க்கையை வெறுத்து உத்தம நபியின் உம்மத்தில் பிறந்த உண்மை முஸ்லிமாக, உட்காரும்போதும், படுக்கும்போதும், நடக்கும்போதும், உலகத்தின் பல வேலைகள் செய்யும்போதும், ரட்சிக்கும் நபி (ஸல்) அவர்கள்மீது ‘தரூத்’ ‘ஸலவாத்து’ ஓதுவதைப்பார்த்து நம் குதுகல கடலுக்கு கரையில்லாமல் போகின்றன. நம் முஸ்லிம் சகோதர, சகோதரிகள் நபி அவர்கள் மீது ஓதும் ஸலவாத்து இன்னும் பன் மடங்கு அதிகமாக ஓதவும், இன்றுவரையில் அதன்மீது கவனம் செலுத்தாமலிருக்கும் கனவான்கள் ஸலவாத்தின் தன்மையை அறிந்து சர்வலோகத்திற்கும் சர்தாராகிய ரஸூலுல்லாஹ் அவர்கள் மீது நேமமாக ஸலவாத்து ஓதவேண்டுமென்ற கருத்தால் இச்சலவாத்தின் சிறப்பை இஸ்லாமிய சகோதர சகோதரிகள் முன் சமர்ப்பிக்கிறேன்.

முஹம்மது முஸ்தபா ரசூல் ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்கள்மீது ஸலவாத்து ஓதவேண்டியது ஒவ்வொரு முஸ்லிம் மீதும் கடமையாக இருக்கிறது. ஆலமடங்கலையும் படைத்த அல்லா சுபுஹானஹூ தஆலாவும், அவனுடைய ‘மலாயிக்’ களும் ஓதி, நபியின் உம்மத்தில் பிறந்த நாமும் சலவாத்து ஓதவேண்டுமென்று ஆண்டவன் தன் திருமறையிலே கூறியுள்ளான்.

"இன்னல்லாஹ வமலாய்கதுஹூ யுஸல்லூன அலன் நபி (ஹீ)யாஅய்யு ஹல்லஜீன ஆமனு ஸல்லு அலேஹி வஸல்லிமு தஸ்லிமா.

(இதன் பொருள்) திட்டமாக ஆண்டவனும் அவனுடைய மலாயிக்களும் நபிநாயகம் மீது ஸலவாத்து ஓதுகிறார்கள். ஒ ஈமான்கொண்டுள்ள மூஃமீன்களே! நீங்களும் அவர்கள் மீது ஸலவாத்து ஓதி ஸலாமத்து பெறுங்கள்.

திருக்குர்ஆன் உடைய இந்த ஆயத்தை கேட்டதும் தரூத் ஓத வேண்டியது முஸ்லிம்கள்மீது 'வாஜிபா' கிறது. இது ஆண்டவனின் அன்பான கட்டளை. இதை எந்த முஸ்லிமும் மறுத்துகூற முடியாது. மேலும் நபி (ஸல்) அவர்கள்மீது நாம் ஸலவாத்து என்று சொன்னால் ஆண்டவன் நம்மீது பத்து ஸலவாத்து ஓதுகிறான். இப்போது நாம் கவனித்து பார்க்கவேண்டியது என்ன வென்றால், நமக்கு தீர்க்கதரிசியாக வந்த தூதர் முஹம்மத் நபி (ஸல்) அவர்களின்மீது ஆண்டவனும் அவனுடைய மலாயிக்களுமே ஸலவாத்து ஓதுவதென்றால், அந்த அஹ்மத் நபி (ஸல்) அவர்களின் அருமை என்ன ! அச்சலவாத்தின் பெருமை என்ன !! ஸலவாத்து ஓதுபவர்களின் சிறப்புதானென்ன !!! அதை கணக்கிட நமக்கு சக்தியுண்டா? வெறும் வாய் அசைத்து இவ்வளவு பெரிய புண்ணியத்தை கொள்ளையிடாமல் ஒரு மனிதன் இருக்கிறான் என்றால்! அவன் உண்மையில் உத்தம நபியின் உம்மத்தில் பிறந்த முஸ்லிமா; இல்லையா? என்ற சந்தேகம்ஏற்படுவது சகஜந்தானே. என்றாலும், இதை எழுதுபவனாகிய நான், எவ்வளவுதான் மூடக்குளத்தில் முழுகியுள்ள முஸ்லிமாக இருந்தாலும் ஸலவாத்து மட்டும் ஓதாமலிருக்கமாட்டார்கள் என்று திடமாக நம்புகிறேன். ஒரு சமயம் என் நம்பிக்கை தவறாக இருந்தாலும் இதை படிப்பவரும் கேட்பவரும் அவசியம் ஸலவாத்தை கடைப்பிடிப்பார்கள் என்பதில் எள்ளளவும் எனக்கு சந்தேகம் கிடையாது.

ஸலவாத்தின் பொருட்டால் ஜீவன விஸ்தீரணமும், வீட்டில் பறக்கத்தும் இதர பல நன்மைகளும் உள்ளன. இவ்வுலகத்தின் நாட்டம் நிறைவேறவும், பகைவர்களை வெல்லவும் சிலர் ஸலவாத்து ஓதிவருகிறார்கள். இச் சலவாத்தின் பொருட்டால் நமக்கு இம்மையிலும் மறுமையிலும் அநேக நன்மைகள் இருக்கிறதென்பது திண்ணம். ஸலவாத்தில் அநேக விதமுண்டு. என்கிலும், தனக்கு எந்த ஸலவாத்து தெரியுமோ அதையே அனுதினமும் நேமமாக ஓதிவந்தால்போதுமானது. அதைக் கொண்டே நாம் இரண்டு லோகத்திலும் இன்பம் காணலாம். ஸலவாத்து ஓதக்கூடிய சிலனை நெருப்பு ஒருநாளும் நாசமாக்காது. நபிநாயகம்மீது ஓதும் ஸலவாத்தின் பொருட்டால் நாம் நரகலோகத்தில் இருந்து மீட்சி பெறலாமென்பதற்கு அத்தாட்சியாக ரசூலுல்லாஹி

அவர்கள் ஜீவிய காலத்தில் நடந்த ஒரு சிறு சம்பவத்தை தங்கள் சந்நிதியில் சமர்ப்பிக்கிறேன்.

தீர்க்க தரிசியான திரு தூதர் முஹம்மத்முஸ்தபா ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை கொண்டு தீய காபிர்கள் மனதில் எல்லாம் தீனுல் இஸ்லாத்தின் தீபம் ஜகஜ்ஜோதியாக ஜ்வாலை விட்டு பிரகாசித்து வரும் அக்காலத்தில், எழில் மிக்க இஸ்லாத்தை ஏசி இகழ்ச்சி செய்யக்கூடிய ஓர் 'ஏஹூதி' இருந்தான். அவன் ஒரு சமயம் ஓர் ஏறியிலிருந்து ஒரு மீனை பிடித்துக் கொண்டுவந்து அதை உடனே சமையல் செய்து வைக்க வேண்டுமென்று தன் மனைவி இடம் அதிகார ஆக்ஞையிட்டு விட்டு வேலைக்கு சென்று விட்டான். வேலைகள் எல்லாம் செய்து விட்டு சாயிந்திரம் வீட்டுக்கு வந்த எஹூதி, தன் மனைவி இன்னும் அம்மீனை சமையல் செய்யாமலிருப்பதை பார்த்து அதிககோபத்தோடு காரணத்தை கேட்டான்.

"இது என்ன மீனோ தெரியவில்லை. நீங்கள் போனதிலிருந்து இது அடுப்பிலேயே இருக்கிறது. இரண்டு சுமை விறகு சாம்பலாகி விட்டது. ஆனால் மீன்மட்டும் வேகாமலே இருக்கிறது" என்று அவன் மனைவி பதிலளித்தாள்.

இதை கேட்ட எஹூதி அதிக ஆச்சரியத்தோடு, எதனாலே இந்த மீன் வேக வில்லை என்று சிந்தனை லோகத்திற்கு சென்று யோசித்துக் கொண்டிருந்தான். சற்று நேரம் சென்றதும் அடுப்பிலுள்ளமீன் பானையிலிருந்து "லாஇலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்" என்று சப்தம் வந்தது. ஏற்கனவே மீனைப் பற்றி ஆச்சரியமடைந்து கொண்டிருக்கும் எஹூதிக்கு இச்சப்தம் அவனுடைய ஆச்சரியத்தை பண் மடங்கு அதிக மாக்கி விட்டது. ஆகவே, அந்த மீன்பானையை அப்படியே தூக்கிக் கொண்டு அவசரமாக அஹமத் நபி (ஸல்) அவர்களிடம் ஓடினான்.

"துண்டு துண்டாக வெட்டி மசாலாக்களும் போட்டு காலையிலிருந்து மாலை வறையில் அடுப்பில் வேகவைத்தும் இந்த மீன் வேகாமல், நீங்கள் அழைக்க கூடிய இஸ்லாத்தின் அழகிய கலீமாவும் ஓதுகிறது. இதன் காரணமென்ன? தெரியப்படுத்துவதோடு பல துண்டுகளாக உள்ள இம்மீனை தாங்கள் மீண்டும் புதிதாக உயிர் பெறச் செய்தால் நானும் என்குடுபத்தார்கள் யாவரும் தங்களை ஆண்டவனுடைய உண்மை ரஸூலாக கருதி இக்ஷணமே ஈமான் கொண்டு இஸ்லாமாகி விடுகிறோம்" என்று இதழ்களில் இஸ்லாத்தின் ஜோதிபிரகாசிக்க, கண்களில் குதூகலம் தவழ, உடலிலும் உள்ளத்திலும் உண்மை 'நபி' யின் உவகை பிறக்க கொஞ்ச மொழிகளில் நபிநாயகம் அவர்களிடம் கெஞ்சினான் அந்த எஹூதி.

எஹூதியின் உண்மை அகீதாவை உணர்ந்து நாயனை மனதில் நாடி அறுபட்ட மீனை அக்கணமே உயிர் பெறச் செய்தார் ஜகத்தின் ஜோதியும் ஜீவகாருண்ய சீலருமான சாந்த மனதுடைய சர்குண நபி. அந்த மீன் உயிர் பெற்று எழுந்ததும், "அஸ்ஸலாமு அலைக்கும் யாரசூலுல்லாஹ்" என்று பரிசுத்த நபியின் பாதத்தில் தவழ்ந்தது. அம்மீனை பார்த்து முஹம்மத் நபி கேட்கிறார்:

"ஓ மீனே ! உன்னை துண்டு துண்டாக வெட்டி, காலை யிலிருந்து மாலைவரை வேகவைத்தும் நீ வேகாத காரணமென்ன ?"

"ரஹ்மதுல்லில் ஆலமின், என்றும் நாணில ரட்சகரே ! நான் தங்கள் பேரில் அன்பு கொண்டு ஓதும் சலவாத்தின் பொருட்டு ஆண்டவன் என்மீது அக்னியை 'ஹராம்' ஆக்கி விட்டான். இந்த ஒரு காரணத்தை தவிர வேறே காரணம் எதுவும் கிடையாது" என்று மீன் சொன்னது.

"உனக்கு இந்த ஸலவாத்தை யார்கற்றுக் கொடுத்தது?" நபிகள் திலகம் மீண்டும் மீனை நோக்கி கேட்டார்கள்.

"நான் எழிலான ஒரு ஏறியில் வாசம் செய்து கொண்டிருக்கும் அந்நாளில் ஒரு நாள் ஒரு மனிதன் தங்கள் மீது சலவாத்து ஓதிக் கொண்டே மீன் பிடித்துக் கொண்டிருந்தான். அவன் தங்கள் மீது சலவாத்து சொல்லும்போது காரண மில்லா ஒரு குதுகலமும், சந்தோஷமும் கூடி என் மனதை பரவசப்படுத்தியது. ஸலவாத்தை கேட்டாலே மனதில் இவ்வளவு சந்தோஷம் ஏற்படுகிறதே, அதை நாமே ஓதிக்கொண்டிருந்தால் எவ்வளவு இன்பமாக இருக்கு மென்றெண்ணி அன்றிலிருந்து நானும் நேமமாக தங்கள் மீது ஸலவாத்து ஓத ஆரம்பித்தேன். அத்துடன் தங்கள் பாதபூஜைக்காக ஆண்டவனிடம் அனுதினமும் பிரார்தித்து வந்தேன். என்பழுதில்லா பிரார்த்தனையை ஆண்டவன் அன்புடன் ஏற்றுக்கொண்டு என்னை இந்த எஹூதியின் வலையில் சிக்க வைத்து தங்களைக் காணும் பாக்கியத்தை கொடுத்தான் அந்த அன்பே உருவான அழிவில்லா ஆண்டவன்" மீன் குதுகல கடலில் குதித்துக் கொண்டும் கூத்தாடிக் கொண்டும் கோமான் நபியிடம் கூறியது.

மீன் உடைய விசித்திரமான வரலாற்றைக் கேட்டுக் கொண்டிருந்த அந்த எஹூதி உடனே தன்குடும்பத்தாருடன், இரு லோக சக்கரவர்த்தியும் இரட்சகருமான அந்த திருதூதர் நபிநாயகம் ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்கள் பாதம் பணிந்து பரிசுத்தமான மனதோடு ஈமான் கொண்டு இஸ்லாமாகி விட்டான்.

நபியின் உம்மத்தில் பிறந்த முஸ்லிம் களாகிய நாம் சிந்தித்து பார்க்கவேண்டியது என்ன வென்றால், 'ஹைவான்' என்ற மிருகஜந்து

களிலுள்ள ஒரு மீன் நபிநாயகம் அவர்கள் மீது ஸலவாத்து ஓதியதின் பயனுக அதை அக்னி அழிக்கவில்லை என்ருல், 'இன்ஸான்' என்றும் மனிதனுக பிறந்த நாம், அதுவும் கருணைமிக்க கடாக்ஷமுள்ள நபியின் உம்மத்தில் பிறந்த மூஃமினீன்கள் ஸலவாத்து ஓதினுல் நம்மை நெருப்பு நாசபடுத்துமா? நரகலோகத்தில் நமக்கு இடம் இருக்குமா?? அப்படி இருந்தாலும் நம்மை இம்சிக்க அந்த அக்னிக்கு சக்தி உண்டா??? இல்லை என்ருல் நரகத்திலிருந்து ரட்சிக்கும் அந்த ஆல நபியின் மீது நாம் ஏன் நேமமாக 'சலவாத்து' ஓதக்கூடாது? இதற்கு பதில், அவசியம் ஓதத்தான் வேண்டு மென்று நாவால் சொன்னுல் மட்டும் நரகத்திலிருந்து மீட்சி பெறமுடியாது. "சலவாத்தின் சிறப்பு" களை அறிந்து அனுதினமும் நேமமாக ஓதிவரவேண்டும். அன்பு மிக்க ஆண்டவன் நம் எல்லோருக்கும், தன் 'ஹபிப்' மீது சலவாத்து ஓதும் 'தௌபீக்' தந்து தீய நரகத்திலிருந்து தடுத்து தயவுடன் அருள் புரிவானுக. ஆமீன், ஸும்ம ஆமீன்

ஸல்லல்லாஹு அலா முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்.

ஸுல்தான் சிக்கந்தர் (அலை) கிஸ்ஸா.

ஸுல்தான் சிக்கந்தர் ஜுல்கர்னைன் (அலை) அவர்கள் ஒரு நபியாக இருந்து உலகத்துக்கும், உலக மக்களுக்கும் பல நல்ல காரியங்கள் செய்திருக்கிருர்கள். ஸுல்தான் சிக்கந்தர் ஜுல் கர்னைன் உடைய அரசாட்சி உலகத்தில் சிறந்த அரசாக்ஷியாய் இருந்தது. "ஜுல்கர்னைன்" என்ருல் இரண்டு கொம்புகளை யுடையவர் என்று அர்த்தம். இதன் விபரமெல்லாம் இந்த நூலில் விரிவாய் சொல்லப்பட்டிருக்கிறது.

இத்துடன் நம்றூது மன்னருடைய கிஸ்ஸாவும், நபி லூத் அலைஹிஸ்ஸலாமுடைய கிஸ்ஸாவும் சேர்த்து எழுதப் பட்டிருக்கிறது. எல்லோரும் படித்து அறிய வேண்டிய பிர யோஜனமான புஸ்தகம் இது. சுத்தத் தமிழ் விலை அணு. 8

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

மாயமாய்

மறைந்த மங்கை.

(தொடர் கதை 5-வது பகுதி)

8-வது அத்தியாயம்.

ஷம்ஸ் கேள்விக்குமேல் கேள்வி போடும்போது ஸூஸி உதட்டை பற்களால் கடித்துக்கொண்டே கேட்டுக் கொண்டிருந்தாள். பிறகு மெதுவாக "எனக்கு நான் தற்போது நடத்திவரும் வாழ்க்கையே பிடிக்கவில்லை. எந்த நேரத்திலும் பயத்துடன் வாழவேண்டியதாக யிருக்கிறது. எப்போது அபாயம் வருமோ வென்று எதிர்ப்பார்த்துக் கொண்டே யிருக்கவேண்டியதிருக்கிறது. மனநிம்மதியே கிடையாது. இருந்தாலும் உனது கேள்விகளுக்கு பதில் சொல்ல என்னால் இய லாது" என்றாள்.

"என்?"

"பயமாகயிருக்கிறது" என்று சொல்லி அக்கம் பக்கம் சுற்றிப் பார்த்தபின் "அவன்—அவன் என்னை கொன்று விடுவான்" என்று மெதுவாக வாயை அசைத்தாள்.

"அவனால் முடியாது. அவன்வெஸ்டர்பியை கொன்றவனானால், நீ அவன் யாரென்றுதெரிவித்ததும், அவன்கையில் விலங்கிடப்பட சுணங் காது"

"பெரியவனையா பிடிக்கப் போகிறீர்கள்?"

"பெரியவனா!"

"ஆம்! எல்லாரும் அவனை பெரியவனென்று கூப்பிடுகிறார்கள்

"எத்தனையோ பெரியவர்களை யெல்லாம் ஜெயிலுக்கு அனுப்பி யாய் விட்டது. நீ ஒன்றும் சொல்லாவிட்டாலும் இவனைப்பிடிப்பது நிச்சயம். எனது ஏஜென்ட் வெஸ்டர்பி! பாவம், அவனைக் கொன்ற வனை நான் விடப்போவதில்லை. உன்னுடைய உதவியினால் கஷ்ட மில்லாமல் வேலைமுடிக்கலாமென்றிருந்தேன். அதுவுமல்லாமல் எனது சிநேகிதர் ரோஸன் கவலையையும் சிக்கிரமாக நீக்க ஓலிவாவையும் கண்டு பிடிக்கலாமென்றிருந்தேன். இன்னொருமுறையும் கேட்கிறேன், எனது கேள்விகளுக்கு பதில் சொல்லு. உனக்கு ஆபத்து வாராமல் நான் பார்த்துக்கொள்கிறேன். எனது அஸிஸ் டென்ட்டு சோடே அதோ

வந்து உட்கார்ந்திருக்கிறான். அவனிடம் எனது துப்பாக்கியைக் கொடுத்து உன்னை இங்கேயே யாதொரு ஆபத்து வராமல் காத்துக் கொண்டிருக்குமாறு சொல்லி, நான் போய் பெரியவனைப்பிடிக்கிறேன்'' என்று சொல்லி கேட்டார்.

"என்றால் சொல்ல பயமாயிருக்கிறது. தற்போது நான் உங்களிடம் பேசிக்கொண்டிருப்பதே பயமாயிருக்கிறது. ஆனால் ஒன்று சொல்லுகிறேன், அவனை உங்களால் பிடிக்க முடியாது. முடியவே முடியாது. அவன் சாதாரண திருடனல்ல.'' என்றாள்.

"அப்படியானால் கொலையில் நீ சம்மந்தப்பட தயார் அல்லவா?''

"இல்லை, இல்லை, நான் சொல்வதை நீங்கள் விளங்கவில்லையே. எனக்கு அவனைப்பற்றி பயம். தங்களுக்கு வேறு எது வேண்டுமானாலும் கேளுங்கள். அவனைப்பற்றி மாத்திரம் கேட்காதீர்கள். நான் அவனைப்பற்றி சொன்னாலும் உங்களுக்கு பிரயோஜனப்படாது'' என்று இரக்க குரலில் அழுதவாறு சொன்னாள்.

"எனக்கு பிரயோஜனப்படுவதைப்பற்றி பின் யோசிக்கலாம். நீ முதலில் சொல்லு. உனக்கு எந்த ஊருக்கு போகவேண்டுமானாலும் பணஉதவி.........'' என்று சொல்வதற்குள் சோடே தான் உட்கார்ந்திருந்த இடத்தை விட்டு எழுந்திருப்பதைக் கவனித்து பேச்சை நிற்பாட்டினார். சோடே ஷம்ஸை கடந்து போவது போல் அருகே வரும்போது ஒரு காகிததுண்டு ஷம்ஸின் மடிமேல் விழுந்தது. இதை ஸூஸியும் பார்த்தாள். ஷம்ஸ் அந்த காகித துண்டை மேஜையின் கீழேயே வைத்து பார்த்தார். "ஒரு மனிதன் வெள்ளை திரையின் பின் நிற்கிறான். உங்கள் சம்பாஷணையை கேட்கக்கூடும். உஷார்'' என்றெழுதியிருந்தது.

"அது என்ன? அதுஎன்ன?'' என்று பதை பதைப்புடன் ஸூஸீ கேட்டாள். ஷம்ஸ் ஒன்றும் பதில் சொல்லவில்லை. திரும்பி திரையைப்பார்த்தார். அது சமையலறையை மறைப்பதற்காக போடப்பட்டதிரை. அந்த திரையின் பின்னால், கஸ்டாவும் இன்னொருவனும் பேசும் சப்தம் கேட்டது.

"நீங்கள் சொல்லியபடி தயார் செய்வேன். மறக்க மாட்டேன்'' என்று கஸ்டாவ் மற்றவனிடம் சொல்லியதை ஷம்ஸ் கேட்டார். மற்றவன் திரையை விட்டு வெளி வந்து, ஷம்ஸ் இருக்கும் மேஜையை பார்க்காத வாறு வெளியே போனான். அவன் பிரபஸர் ஸான்டரின் அஸிஸ்டென்ட் ஜான். அவன் வெளியே போனபின் ஸூஸியைப் பார்த்தார். முகம் வெளுத்து, கண்கள் ஏதோ பயத்தால் ஒரே நிலையில் நிற்பதை போல் தோன்றியது.

"ஓஹோ! இவன் தான் பெரியவனே!" என்றார் ஷம்ஸ். "இல்லை இல்லை. இவன் பிரபஸருடன் அவ்வீட்டில் தங்கவந்தவன். பர பஸரைப் போல் சாந்த குணமுடையவன். வேறுயாரோ என்று பயந் தேன்" என்று சொல்லிக் கொண்டே எழுந்து "நான் போக வேண்டும். என் பின்னல் வராதேயுங்கள். நீங்கள் எனக்கு உதவி செய்வதாக சொல்லுகிறீர்கள். உண்மையாக உதவி செய்யவேண்டு மானல் என்னுடன் வராதேயுங்கள், கொலையில் சம்மந்தப்படாம லிருக்க முயற்சிக்கப் போகிறேன்." என்று சொல்லியவாறு ஹோட்டலை விட்டு வெளியே போனுள். ஷம்ஸ் அவளை தடுக்காமல் தன் முன்னிருந்த காப்பியைக் குடித்து விட்டு சோடேவைப்பார்த் தார். அவன் சாப்பாடு சாப்பிட்டுக்கொண்டிருந்தான். அவனிடம் கண் ஜாடை காட்டியபின் மெத்தைக்கு போய் சோடேவின் அறை யினுள் போய் உட்கார்ந்தார். இரண்டு நிமிஷங்களில் சோடேவும் அங்குவந்து சேர்ந்தான்.

"இனிதான் உனக்கு வேலை ஆரம்பமாகிறது. என்னுடனிருந்த பெண்ணை பார்த்தாயா? அவள் பெயர் ஸூஸி. அவள் 8 நம்பர் வீட்டிலிருக்கிறுள். இனி நீ 6 நம்பர் –8 நம்பர் இவ்விரண்டு வீடு களையும் கவனிக்க வேண்டும்."

"முக்கியம் ஸூஸியைத்தானே?"

"ஆம். அவள் வீட்டை விட்டு வெளியே போனுல், எங்கு போனுலும் பின் தொடர்ந்து போ. இரண்டு விஷயங்கள் நடக்கக்கூடும். ஒன்று: அவள் இக்கூட்டத்தை விட்டு விட்டு ஓடக்கூடும். அவள் போக்ஸ்டோனே விட்டு போவதற்குள் இன்னெரு முறை நான் அவளிடம் பேசினுல் நலமென்று நினைக்கிறேன்."

"இன்னென்று?"

"அவளறியாமல் அவளை அவ்வீட்டை விட்டு கடத்தப்படும். பின் அவ்வீட்டிற்கு திரும்பமாட்டாள்"

"அவளை கொலை செய்து, அவளை கொண்டு போய் விடுவார்களா?"

"அப்படியும் ஆகக்கூடும். வெஸ்டர்பியைக் கொன்று, ரேனி பர்க்கை பிடித்து வைத்திருப்பவனுக்கு கொலை மிக சாதாரணம். இவள் இன்று என்னுடன் பேசிக் கொண்டிருந்ததை அறிந்தால், இவளை விட்டால் தனக்கு ஆபத்து என்று, இவளையும் வேலை முடிக்கலாம்."

"வேறு ஏதும் உண்டா?"

"நல்ல மோட்டார்சைகிள் ஒன்றை வாடகைக்கு அமர்த்தி, அவ் வீட்டினருகே ஒளித்து வைத்திரு. சில சமயத்தில் காரை பின்

தொட்ா ஏற்பட்டால் மோட்டார்சைகிள் பிரயோஜனமாக யிருக்கும். ஏதாவது கூடிய சீக்கிரம் நடைபெறு மென்றே நினைக்கிறேன். இன்ஸ்பெக்டர் தாமஸ்யிடம் கலந்து, மோட்டார்சைகிள் ஓட்டக்கூடியவ ஞெருவனை, உன்னை மாற்ற நாளை அனுப்ப ஏற்பாடு செய்கிறேன்"

"நான் இப்பொழுதே புறப்படுகிறேன்" என்று சோடே சொல்லி நேரே மோடார்சைகிள் வாடகை அமர்த்தச் சென்ருன். ஷம்ஸ் ஹோட்டலை விட்டு, நேராக 6-நெ. வீட்டிற்கு வந்தார்.

சோடே, மோட்டார்சைகிளை எடுத்துக் கொண்டு 6-நெ. வீட்டி னருகே வந்து கவனித்தான். கொஞ்ச தூரத்தில் ஒரு சிறிய சந்து இருந்ததைப் பார்த்து, அங்கு தனது மோட்டார்சைகிளை நிற்பாட்டிய பின் இவ்விரண்டு வீடுகளையும் கொஞ்ச தூரத்தி லிருந்து கவனித்துக் கொண்டிருந்தான். ஒன்றிரண்டு முறை 6-நெ. வீட்டு முன் அறைக்கு ஷம்ஸ் வந்து போனதையும் பார்த்தான். சில மணி நேரங்களாகியும் ஸூஸியை சோடே பார்க்கவேயில்லை. இருந்தாலும் பொறுமையுடன் பார்த்துக் கொண்டே யிருந்தான். இருட்டானதும் இரு வீடுகளிலும் விளக்கு வெளிச்சம் தெரிந்தது. சோடேவுக்கு சிகரேட் பிடிக்க எண்ண மிருந்தும், இருட்டில் சிகரேட் பிடித்தால், தான் இருட்டி லிருப்பது மற்றவர்களுக்கு நன்ருக தெரியுமென்று நினைத்து, உட்கார்ந்திருந்தான். இரவு மணி 11 எங்கோ அடிப்பதையும் கேட்டான். இரு வீட்டிலும் எறிந்து கொண்டிருந்த விளக்குகள் ஒவ்வொன்ருக அணையப்பட்டன. கொஞ்ச நேரத்தில் தெரு விளக்கு ஒன்று எறிந்து கொண்டிருப்பதை தவிற வேறு வெளிச்சமுமில்லை. எங்கும் நிசப்தமாக யிருந்தது.

அச்சமயத்தில் கொஞ்ச தூரத்தில் ஒரு கார் வருவதாக வெளிச்சம் தெரிந்தது. அந்த கார் அந்த தெருவிலுள்ள விளக்கினருகே வந்து நிற் பாட்டப்பட்டது. அதிலிருந்து ஒரு மனிதன், பெரிய தோல் கோட் அணிந்தவனுகவும் கண்களில் கருப்பு மூக்குக் கண்ணாடி போட்ட வனுகவும் இறங்கினன். அவன் நடந்து நேராக 8-நெ. வீட் டிற்கு வந்து உள் சென்ருன். கதவை தட்டவுமில்லை, சாவியால் திறக்கவுமில்லை. அவன் வருவதை எதிர்பார்த்து கதவு திறக்கப்பட்டு வைத்திருக்கு மென்று இவைகளை யெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த சோடே அறிந்தான். அவன் நடக்கும் காலடி சப்தம் கேட்காமல் நடந்ததால், காலில் ரப்பர் பூட்ஸ் போட்டிருக்கக் கூடுமென்றும் நினைத் தான். அவன் வீட்டினுள் போய் சுமார் 20-நிமிஷ மிருக்கும். வெளியில் கார் நிற்பாட்டப்பட்டிருப்பதால், உள்ளே போனவன் கட்டா யம் வெளி வருவான் என்று சோடே எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். அதன் படி வெளி வந்தான். ஆனல் அவனுடன் ஒரு பெண்ணும் வந்தாள். அவள் ஸூஸியா வென்று சோடேவால் அறிய முடியவில்லை.

இருட்டில் கூர்ந்து கவனித்தான். தெரியவில்லை. இதற்கிடையில் அவ்விருவர்களும் வீட்டை விட்டு வெளியில் தெருவில் வந்து காரை நோக்கி நடக்கிறார்கள். சோடே என்ன செய்வதென்று யோசித்தான். அவர்கள் காரினருகே போனதும் அங்குள்ள தெருவின் விளக்கு வெளிச்சத்தில் அவள் ஸூஸி யென்பதை அறிந்தான். அதுவுமல்லாமல் ஸூஸி ஏதோ தூக்கத்தில் நடப்பதைப் போன்று நடந்து காரில் ஏறுவதையும் பின்னால் நெருங்கியவாறு அந்த மனிதன் காரில் ஏறுவதையும், அந்த மனிதன் ஒரு கையை கோட் ஜேபியில் வைத்தவாறு அந்த கையை ஸூஸி முதுகின் பின் வைத்திருந்ததையும் பார்த்து, " துப்பாக்கியால் பயமுறுத்தி, அவளை கொண்டு போகிறான்" என்று நினைத்து, அங்கிருந்து தான் ஒளித்து வைத்திருக்கும் மோட்டார் சைகிளை தேடி ஓடினான். அதை ஒரே மிதியிற் ஸ்டார்ட் செய்தான். விளக்கை ஏற்றாமல் திருப்பி வேகமாக ஓட்டினான் பெரிய கார் போகும் திக்கை நோக்கி.

9–வது அத்தியாயம்.

கார் மிக வேகமாக போக்ஸ்டோன் கிராமத்திலிருந்து போவதை அங்கு ஒரு தெருவின் ஓரத்தில் உட்கார்ந்திருந்த கான்ஸ்டேபிளும் பார்த்து எச்சரிக்கை செய்ய சப்தமிட்டான். அவன் சப்தத்தை கேட்டும் காரின் வேகம் குறையவில்லை. சில விநாடிகளுக்குள் அந்த காரை பின் துடர்ந்து ஒரு மோட்டார்சைகிள் வேகமாக போவதையும் கான்ஸ்டேபிள் சந்தேகத்துடன் பார்த்தான். சோடே முன் போகும் காரின் பின் விளக்கு தெரியவே, தனது மோட்டார் சைகிளின் வேகத்தை குறைத்து, காரை தூரத்திலிருந்து பின் துடர்ந்தவாறு சென்றான். இவ்வாறு தூரத்திலேயே பின் தொடர்வது நல்லதா? அல்லது மோட்டார் சைகிளை வேகமாக விட்டு, அருகே போய் அவனைப் பிடிக்க முயற்சிப்பது நல்லதா? என்று யோசித்தான் சோடே. இவ்வாறெல்லாம் இங்கு தனக்கு வேலை வருமென்று நினைத்திருந்தால், தனது கைத் துப்பாக்கியையும் கொண்டு வந்திருக்கலாமே. லண்டனில் விட்டு விட்டு வரவேண்டியதில்லையே என்று கைசேதப் பட்டான். இவ்வாறு யோசித்தவாறு காரை பின் தொடர்ந்து போகும்போது, முன்பு போனகார் ரோட் திரும்ப, வேகம் குறைந்தது. அச்சமயத்தில் காரைவிட்டு பாய ஸூஸி முயற்ச்சித்ததையும் அதே நேரத்தில் காரை ஓட்டியவன் ஒரு கையால் அவளைப் பிடித்திழுத்ததையும் நிலா வெளிச்சத்தில், பின்வந்த சோடே கவனித்தான். வலது புறம் உட்கார்ந்து ஓட்டியவன் காரை ஓட்டிக் கொண்டே அவளை வலது கையால் பிடித்திழுத்திருக்கலாம். ஆனால் இவன் காரின் ஸ்டேரிங்கை விட்டு பின் திரும்பி இடது கையால் அவளை இழுத்தான். அதையறிந்த சோடே, காரிலிருப்பவன் வெஸ்டர்பியைக் கொன்ற இடது கையன் என்றறிந்து, தனது மோடார் சைகிளை வேக

மாக விட்டு அக்காரின் பக்கத்தில் போய், மோடர் சைகிளிலிருந்து, கார் டிரைவரைப் பிடிக்க பாய்ந்தான். அதை ஒரு விஞடி முன்பே அறிந்த கார் ஓட்டுபவன் மெதுவாக ஓடி வந்த காரை மிக வேகமாக உடனே ஓட்டவே, சோடே பாய்ந்த நேரம் கொஞ்சம் பிந்தியது. நல்ல வேளையாக இவன் காரின்மேல் பாய்ந்த சமயம் கார் வேகமாக ஓடி விடவே, கார் மேல் விழாமல் அந்த ரோட்டின் பக்கத்திலுள்ள செடி களில் விழுந்தான். காயமொன்றும் தனக்கு ஏற்படவில்லை யென்றறிந் ததும், மறுபடியும் மோடர் சைகிளை எடுத்து, காரை நோக்கி வேகமாக ஓட்டினுன்.

அவ்வாறு போகும் போது "பிளாப்!" என்று தனது காதி னருகே சென்றவாறு சோடே சப்தம் கேட்டான். காரிலிருப்பவன் துப்பாக்கியால் தன்னைச் சுடுவதை யறிந்தான். அப்படி யிருந்தும் காரைப் பின்துடர்வதை விடவில்லை. தன் வசம் துப்பாக்கி யில்லாததைப் பற்றியும் வருந்தினுன். தாங்கள் போகும் வழியைப் பற்றி யோசித் தான். இவ்வழியாக தான் முன்பு வந்திருப்பது ஞாபகம் வந்தது. அந்த ரோட்டின் ஒரு புரமாக காடைப்போல் செடிகள் வளர்ந்திருந்தது. ஒரு புரம் மலையினடிவாரம். அங்கிருந்து கொஞ்ச தூரத்தில் ஒரு பெரிய பள்ளம், சுமார் 60 அடி ஆளமுள்ள திருக்கிறது. அந்த பள் ளத்திற்குமுன் வேலிப் போட்டு தடுக்கப் பட்டிருக்கிறது. இதை யெல்லாம் சோடே அறிந்திருந்தான். அவ்வழியைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கும் போது, முன்னுல் காரை ஓட்டுபவன் மறுமுறை சுட் டான். இம்முறை சோடேவை குறிவைத்துச் சுடவில்லை. மோடர் சைகிளின் டயரைப் பார்த்து சுடவே, டயர் படார் என்று வெடித்தது. வேகமாக ஓடிக் கொண்டிருந்த மோடர் சைக்கிளின் முன் சக்கரம் திரும் பவே, சோடே அவனறியாமல் தூக்கிவாரி செடிகளின் பேரில் போடப்பட்டான். இச்சமயம் அவனுக்கு முகத்திலும் கையிலும் காயங்கள் பட்டன. இருந்த போதிலும் உருண்டு சமாளித்து எழுந்து காரைப் பார்த்தான். கொஞ்ச தூரத்தில் ஓடிக் கொண்டிருந்த காரி லிருந்து, ஓட்டியவன் செடிகளில் குதித்ததையும், அக்காரின் பின் டயரில் காற்றில்லாம லிருப்பதையும் கார் குதித்துக் கொண்டு ஓடி பக் கத்திலுள்ள செடிகளில் மோதி பிரண்டு, கொஞ்ச தூரத்திலிருந்த பள் ளத்தில் விழுவதையும் பார்த்தான். தனது காரின் டயர் ஏதாவது முள் குத்தியதால் காற்றில்லாமல் போகவே, அதில் தானிருப்பது தனக்கு ஆபத்தென்றறிந்து காரைவிட்டு குதித்திருக்கலாம். அதுவு மல்லாமல் கார் பள்ளத்தில் விழுந்தால் அதிலிருக்கும் ஸலீஸியும் இறக் கக் கூடும் என்னும் இரண்டு எண்ணத்திஞல் காரை விட்டு அவன் குதித்திருக்கக் கூடுமென்று சோடே நினைத்தான். கார் பள்ளத்தில் விழும்போது உள்ளிருந்த ஸலீஸி அலறிய சப்தத்தையும் சோடே கேட்டான்.

10–வது அத்தியாயம்.

காரிலிருந்து குதித்தவன் உடனே எழுந்து சோடே விழுந்திருக்கும் திக்கை நோக்கி மூன்று முறை சுட்டான். அதிர்ஷ்ட்ட வசமாக சோடேவின் பேரில் ஒரு குண்டும் படவில்லை. ஆனால் சுட்டவன் மரம் செடிகளில் புகுந்து ஓடிவிட்டான். அவன் பின்னால் ஓடுவதை விட, காரிலிருந்த ஸூஸிக்கு உயிரிருந்தால் ஏதாவது உதவி செய்யலாமென்றெண்ணி, தன்னிடமிருந்த டார்ச் எடுத்து பார்த்தான். தான் இருமுறை விழுந்ததில் அந்த டார்ச் கெட்டு, எறியவில்லை. கார் விழுந்த சப்தத்தை கேட்ட, கொஞ்ச தூரத்திலிருந்த ஓர் குடிசையிலிருந்தவர்கள் எழுந்து விளக்கை யேற்றி வெளிவந்தார்கள். ஓர் கிழவனும் கிழவியும் அக் குடிசையினின்றும் வெளிவந்து சோடேவைப் பார்த்து "ஏதோ சப்தம் கேட்டதே! ஏதும் அபாயம் நேர்ந்ததா?" என்று கேட்டார்கள்.

"ஆம், ஒரு கார் அங்குள்ள பள்ளத்தில் விழுந்து விட்டது. அதில் ஒரு பெண்ணு மிருந்தாள். உங்களிடம் விளக்கு யிருந்தால் கொண்டு வாருங்கள். போய் பார்க்கலாம்" என்று சோடே சொன்னான்.

அதைக்கேட்ட கிழவி "ஐயோ பாவம்! உடனே விளக்கை எடுத்துக்கொண்டு இவ்வாலிபனுடன் போங்கள்" என்று தன்புருஷனிடம் சொன்னாள். உடனே அக்கிழவன் வீட்டினுள்போய் ஓர் ஹரிகன் விளக்கை எடுத்துக் கொண்டு வந்தான். சோடே முன்பாகவும் பின்னே கிழவனும் மெதுமெதுவாக அப்பள்ளத்தில் யிறங்கினார்கள். காரின் அருக்கே வந்ததும் அது சரிந்து கிடைப்பதையும் கதவுகளெல்லாம் நசுங்கி வளைந்திருப்பதையும் பார்த்தான் சோடே. ஆனால் அவளைக் காணவில்லை. "கார் இங்கு விழுவதற்குள் அவள் காரிலிருந்து வெளியே விழுந்திருந்தால் அங்கு எங்காவது கிடப்பாள்" என்று சுட்டிகாட்டி கொஞ்சதூரம் வந்தவழியே சென்றான்.

அங்கு புதரினடவே அவள் முகமெல்லாம் வறண்டப்பட்டு இரத்தமும் மண்ணும் கலந்து கிடந்தாள். அவள் கை பின்புறம் திருகப்பட்டிருந்தது, கண்கள் மூடப்பட்டிருந்தன. சோடே அருகே சென்று வாயினருகே தன் காதைவைத்துப் பார்த்தான். ஆச்சரியத்துடன் "உயிரிருக்கிறது. இவளை தூக்கக் கூடாது. ஒரு டாக்டரை சிக்கிரமாக கூப்பிட்டுவர உங்களால் முடியுமா?" என்று சோடே கேட்டான். "2மைல் தூரத்தில் ஒரு டாக்டரிருக்கிறார் என் குதிரைவண்டியில் போய் கூப்பிட்டு வரக்கூடும்" என்றார் கிழவர். "தயவுசெய்து சுணங்காமல் கூப்பிட்டுவாருங்கள். நீங்கள் வரும்வரை நான் இங்கேயே யிருக்கிறேன்" என்று சோடே சொல்லவே, கிழவன் பள்ளத்திலிருந்து மேலே ஏறினான். சோடே தனது கைகுட்டையால்

ஸூஸியின் முகத்தை மெதுவாக துடைத்தான். அவள் சிறிது உசும்பி ஞள். கண்களை சிறிது திறந்து சோடேவைப் பார்த்தாள். உதடுகள் அசைந்தன. என்ன சொல்கிருளென்று உற்றுகேட்டான். தூக்கு என்று சொல்வதுபோல் தோன்றிற்று. உடனே தனது கைகளை அவள் முதுகின் கீழ்விட்டு மெதுவாக சாய்த்து உட்கார வைத்தான். அவள் கண்கள் மூடப்பட்டன. அவள் தலை இவன்மேல் சரிந்தது. உடனே பயந்து மூச்சிருக்கிறதா வென்று கவனித்தான். உயிரிருந்ததை யறிந்து அப்படியே உட்கார்ந்திருந்தான்.

சுமார் ½ மணி நேரத்திற்குப்பின் ஒரு காரின்சப்தம் கேட்டது. சில நிமிஷங்களுக்குள் அந்தகிராமத்து டாக்டர் ஸ்டான் என்பவர் ஓடிவந்து அவளை கவனித்தார். "பலத்த காயம். ஒருகை, ஒரு கால் எலும்புகளும் இரண்டு விலா எலும்புகளும் உடைந்திருக் கின்றன. இதல்லாமல் உள் காயமொன்றுமி ல்லாவிடில் பிழைக்கக் கூடும். கிழவரை தூக்குபடுக்கை எடுத்துவா வென்றேன். நீயும் சீக்கிரம் மேலேபோய் அதை எடுத்துவா" என்றூர் டாக்டர். சோடே உடனே ஓடிப்போய் தூக்குபடுக்கையை எடுத்துவந்தான். அதில் அவளை படுக்க வைத்து, "நீங்கள் இருவரும் மெதுவாக தூக்கிவாருங்கள்" என்று சொல்லி, டாக்டர் சீக்கிரமாக மேல் ஏறிபோய், காரைஓட்டிக் கொண்டு சமீபத்திலுள்ள டெலிபோனைத்தேடி, அங்கிருந்து ஆஸ்பத் திரிக்கு ஆம்புலன்ஸ் அனுப்புமாறு போன் செய்தபின், பள்ளத்தி னருகே வரவும் அதற்குள் சோடேவும் கிழவரும் அவளை தூக்கி மேற்படி காரினருகே கொண்டு வந்தார்கள். டாக்டரும் இருவருடன் சேர்ந்து அவளைகாரில் வைத்தார்கள். "இவள் எப்பொழுது பேசுவாள்" என்று சோடே கேட்க, "இப்பொழுது எப்படி சொல்லமுடியும்? உள் காயங்கள் எவ்வாறு என்றறிந்தபின்தான் சொல்லமுடியும். அநேக மாக நாளை ஜனியினுல் ஏதாவது வாய்பிதற்றக் கூடும்" என்று டாக்டர் சொன்ஞர். பின்பு தானும் அந்த காரில் வருகிறேனென்று சொல்லிய தற்கு டாக்டர் மறுத்ததை சோடே கவனித்து ஆச்சரியமாஞன்.

பிறகு சோடே மறுபடியும் பள்ளத்திலுள்ள காரினருகே போய் பார்த்தான். கார்நம்பரை முன்பே ஞாபகத்தில் வைத்திருந்தான். அதைத் தவிர வேரு அறியவேண்டிய தொன்றுமில்லாததால் அங்கிருந்து தனது மோட்டார் சைகிளிடம் வந்து அதன் டைரை சரிசெய்ய முடியுமா வென்று கவனிக்கவந்தான். அங்கு வந்த பொழுது, கொஞ்ச தூரத் தில் ஒரு வெளிச்சம் தெரிந்தது. அது ஒரு (டார்ச்) விளக்கின் வெளிச் சத்தைப்போல் தெரிந்தது. "அந்த கொலைபாதகன் திரும்பிவருகிருனே? ஏதாவது அவனது சாமான் தவறிவிட்டதால், அதை மறுபடி திரும்பி வந்து எடுக்கவருகிருனே?" என்று யோசித்தான். எதற்கும் அவனிடம் துப்பாக்கியிருப்பதால் தான் அங்கு நிற்பது அபாயமென்றெண்ணி, செடிகளினுள் பதுங்கியவாறு சுற்றுவழியாக அந்த வெளிச்சமுள்ள

திக்கை நோக்கி சப்தமிடாமல் நடந்து, வெளிச்சத்திற்கு பின்பக்கம் 20 கஜம் தூரம் போனான். அங்கிருந்து மெதுமெதுவாக முன்வந்தான். வெளிச்சத்தினருகே வந்ததும் அந்த விளக்கையுடையவன்மேல் பாய தயாராகி நெறுங்கியதும், தான் ஏமாற்றப்பட்டதை யறிந்தான். ஒரு கயிற்றில் விளக்கை கட்டி மரத்தில் தொங்கிக்கொண்டிருந்ததைக் கவனித்தான். கயிற்றின் மறுநுனி மரத்தின் கிளையைத்தாண்டி இன்னொரு புதருக்குக்கீழ் போவதை பார்த்து அங்கு எதிரி ஒளித்துக்கொண்டு கயிறைபிடித்துக்கொண்டிருப்பா னென்று அறிந்து, அங்கு பாய்ந்தான். அவன் எதிர் பார்த்ததற்கு மாறாக, அவன் பாய்ந்ததும் அங்கிருந்த மரத்தின் மேலிருந்து ஒருவன் சோடேமேல் விழுந்தான். கீழேமாட்டிக்கொண்ட சோடே, ஒருகையால் தனதுமேல் விழுந்தவனின் கழுத்தில் கையைப்போட்டு கீழே தள்ள முயற்சித்தான். அதே சமயத்தில் மேலிருந்தவன், தனது கையிலிருந்த துப்பாக்கியின் கைப்பிடியால் சோடேவின் தலையில் ஒரு அடி பலமாக வைத்தான். அந்த அடியினால் சோடே ஸ்மரணையற்று விழுந்தான்.

(தொடரும்.)

முஹ்யித்தீன் ஆண்டவர்கள் காரண சரித்திரம்.

இதாகிறது கல்விக்கடலாகிய இமாம் அப்துல்லாஹில் ஷாபிஈ றலியல்லாஹு அன்ஹு அவர்கள், அல்குத்துபுர் றப்பானி வல்கவுதுஸ் ஸமதானீ ஸையிதினா முஹ்யித்தீன் அப்துல் காதிரில் ஜைலானீ றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய காரண சரித்திரங்களில் நின்றும், கஷ்பு கறாமத்துகளில் நின்றும், அருமையும் அற்புதமான ஹிகாயத்துகளாக அறபியில் எழுதியிருந்த கிதாபை தமிழில் மொழிபெயர்த்து முஹ்யித்தீன் ஆண்டவர்கள் காரண சரித்திர மென்னும் நாமமிட்டு அச்சிடப்பட்டது; கலிகோ பைண்டு செய்யப்பட்டுள்ளது.

இதன் விலை ரூபா 3

கிடைக்குமிடம் :—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்
ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்.
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

தொழுகையின் மகாத்மியம்

(தி-வி. பேட்டை, R. J. A. காலேஜ், M. S. காஜா முஈனுத்தீன்)

நெடுநாள் நிற பேதத்தால் நலிவுற்றுக் கிடந்த மனித சமுதாயத்திற்குள் விளிப்புணற்சியைத் தோற்றுவித்து, மனிதன் எல்லோரும் சமம், ஒரு ஆண் பெண்ணி லிருந்து தான் மனித வர்க்கம் உற்பத்தி யானது. (குர்ஆன்)

மனிதனில் ஏற்றத்தாழ்வு இல்லை. எல்லோரும் ஆதமின் மக்கள். ஆதம் (அலை) மண்ணால் சமைக்கப்பட்டவர். நபி என்ற வீர மொழிகளால் புதியதொரு மாறுதலை ஏற்படுத்தி இம்மாபெரும் சமரச நெறியை அனுஷ்டான முறையிலே எண்பித்துக்காட்ட இஸ்லாம் இறை வணக்கத்திலேயே வழி கோலியது! அபிஸீனிய நாட்டு அரசர் நஜ்ஜாசி, அம்மான் நாட்டு மன்னர் ஜீபர், தூமதுல் ஜந்தல் நாட்டு மன்னர் அகிதர், நஜத் நாட்டு நீக்ரோக்கள், தஹமா நாட்டு பத்துக்கள், எமன் நாட்டு ஏழைகள் யாவரையும் தோளோடு தோள் நிறுத்திப் பழக்கியது இஸ்லாம் இந்தத் தொழுகையின் மூலம். தொழுகையிலே இம்மை மறுமையின் விஷயங்களை ஒன்றாகப் பிணைக்கப்பட்டிருக்கிறது. தொழுகை மன அமைதியை உண்டு பண்ணுகிறது. உள்ளத்திலே புதுப்புது உணர்ச்சிகளை தோற்றுவிக்கிறது. தீங்கில் பிரவேசிக்காமல் தடை செய்கிறது! (குர்ஆன்)

அடியான் தனது அரசனுக்கு முன் சிரம் சாய்த்து உனக்கு அடி பணிந்தேன் என செயல் முறையில் காட்டும் பொழுது அடியானின் பதவி உயர்கிறது; மக்களுக்கு மத்தியில் போற்றப்படுகிறான். ஈடு இணையில்லா சர்வ சிருஷ்டிகர்த்தாவின் சமூகத்திலே ஒழுக்கமுடன் மனப் பரிசுத்தத்துடன் ஏகத்துவ தொழுகையினைச் செய்யும் மனிதன் பெரும் பாக்கியத்திற்கும் ஒரு எல்லை கோலுவது சாலுமோ?

நமது பெருமானார் (ஸல்) உலகை விட்டுச் சென்ற ஒரு சில ஆண்டு நிலையைக்கண்ட ஹஜ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், முஸ்லிம்கள் பள்ளிகளை யூதகிருஸ்தவர்கள் அலங்கரிப்பதைப் போன்று அலங்கரிக்கிறார்கள் என கடிந்துள்ளனர். ஹஜ்ரத் அனஸிப்னுமாலிக் (ரலி) அவர்கள், முஸ்லிம்கள் பள்ளிகளைக் கட்டி பெருமை யடிக்கிறார்களே தவிர பரிபாலிப்பதில்லை; அன்றைய ஈத்தஒலைக் கடியில் நடந்த தொழு

கையை இன்று காண்பதற்கரிதாகி விட்டதே எனக் கலங்கினர்கள். இவ்விரு அறிஞர் மணிகளும் ஏன் கலங்கினர்கள்! மக்கள் சரியான நேரத்தில் தொழுவதில்லை என்று!! இன்றைய வாரத்திற் கொருமுறை, வருடத்திற் கொருமுறை தொழுபவர்களே அப்பூன்மாங்கள் கண்ணுற்றால் இரத்தக் கண்ணீர் வடிப்பார்கள் என்பதில் என்ன சந்தேகம்.

பேரின்பம் கண்ட பெரியார்கள்.

இஸ்லாத்தின் இரண்டாவது கலீபா ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்களின் ஆட்சி காலத்தில் ஹிஜ்ரி 17-ம் ஆண்டு இஸ்லாத்திற்கு இன்னல் விளைவித்துக் கொண்டிருந்த இராக் நாட்டை அண்மித்ததுஸ்தர்வாசிகளிடம் எதிர்த்து போர் தொடுக்க இஸ்லாமிய படை ஒன்று அபூமூஸல் அஸ்அரி (ரலி) என்பவரை தளபதியாகக் கொண்டு சென்றது. இப்போரைக் குறித்து அனஸ் (ரலி) கூறுவதாவது :—நாங்கள் துஸ்தர் என்ற ஊரை முற்றுகையிட்டு கிழக்கு வெளுக்கு முன் போர் தொடுத்தோம். புறத்திலே புஜபலத்தால் அகத்திலே அன்பால் ஆத்ம சக்தியால் எதிரிகளை வெல்லும் பண்பினர்களாகிய முஸ்லிம் வீரர்களின் மாவேக முயற்சியால் சூரியன் உதயமாகி சில மணி நேரத்துக்குள் இறைவனருளால் வெற்றி கிட்டி விட்டது. ஆனால் இக்குரிய கால வெற்றி எனக்கு திருப்தி யளிக்கக் கூடியதாக இல்லை. ஏனெனில் அன்றைய தின சுப்ஹின் தொழுகையை நேரந்தவறி தொழ வேண்டியது ஏற்பட்டதே, அதுவே எனக்குப் பெரும் அதிருப்தி எனக் கூறுகிறார்கள்.

நான்காவது கலீபா ஹஜ்ரத் அலி-ரலி தொழுகையின் நேரம் வந்துவிட்டால் நடுங்குவர். ஏன் நடுங்குகிறீர்கள் என சிலர் கேட்டதற்கு இறைவன் மனிதனிடத்தில் அமானிதத்தை கொடுத்தேன் என கூறுகின்றானல்லவா, அந்த அமானிதத்தை நிறைவேற்றும்நேரம் இது, என பதிலுரைத்தார்கள். மௌலானா ரூமி (ரஹ்) ஒருகவிதையிலே தன் வணக்கத்தைப் பற்றி அல்லாஹ்வின்மீது ஆணையாக நான் தொழ நின்றால் எப்பொழுது "ருகூஉ" செய்தோம் யார் இமாம் என்பது எனக்கு தெரிவதில்லை எனச்சித்தரித்துள்ளார்கள்! ஸுப்ஹானல்லா! இவர்களல்லவோ உண்மை முஸ்லிம்கள், அல்லாஹ்வினது உண்மை பக்தர்கள். இதுபோன்று அநேக பெரியார்கள் தொழுகையிலே பேரின்பம் கண்டிருக்கிறார்கள்.

இஸ்லாத்தின் எச்சரிக்கை.

முஸ்லிம் என்பவன் ஐந்து நேரமும் தொழுதுவரவேண்டும். ஈமானுக்கும் குப்ருக்கும் மத்தியில் தொழுகைதான் வித்தியாசம். தொழுகை மார்க்கத்தூண். தொழுதவன் தூணை நிறுத்தியவனாவான்,

தொழுகையை விட்டவன் இஸ்லாத்தின் தூணை இடித்தவனுவான். தொழுகையை மனமுரண்டுடன் விட்டவன் காபிர் என மிகவண்மை யாக எச்சரித்துள்ளது! ஈதென்ன! எதிரிகளை எதிர்த்து சமர்செய்யும் சமயத்திலும் ஒரு கூட்டம் எதிரிகளிடத்திலும் ஒரு கூட்டம் நேரம் வந்தவுடன் இறைவணக்கத்திலும் ஈடுபடட்டுமென போதிக்கப்பட்டுள் ளது. நம் அருமைப் பெருமானுர் (ஸல்) அவர்கள் ஒரு பெரும் கூட் டத்தினர் இஸ்லாத்தைத் தழுவுவதை பெரிதென கருதவில்லை, இறைவ ணக்கத்தையே மேம்பட்டதென கருதினுர்கள். இச்சரிதை மிகநீண்டது அதை விரிவஞ்சி அதன் சாரத்தைமட்டும் குறிப்பிடுகிறேன்.

ஹுதைபிய்யா உடன்படிக்கையின் தருவாயில் மக்காவாசிகளின் மூலமாக வக்கீலாக வந்திருந்த உர்வதுப்னுமஸ்ஊது தகபி என்பார் இஸ்லாத்தின் ஐக்கிய மனோபாவத்தைக் கண்ணுற்று சில ஆண்டுகளுக் குப் பின் இஸ்லாத்தை ஏற்று அவர்களது கிளையினனுக்கு மத்தியில் இஸ்லாத்தை எடுத்துரைக்கச் சென்று ஒரு எதிரியால் ஷஹீதாக்கப் பட்டார். உர்வதுப்னுமஸ்ஊது ஷஹீதாக்கப்பட்டது அம்மக்களுக்கு மத்தியில் கிளர்ச்சியை ஏற்படுத்தியது. ஒரு லட்சியத்திற்காக கொல் லப்பட்டார் என்பது அம்மக்களை வெகுவாக வாட்டியது. அந்த லட்சி யத்தை அலசிப் பார்க்க தூண்டியது. தகபீ கூட்டம் மதினுவை நோக்கி வருகிறது. முஸ்லிம்களால் இஸ்லாத்தை எடுத்தியம்பப்படுகிறது. இஸ் லாத்திலே பற்றுதல் ஏற்பட்டஉடன் பெருமானுர் (ஸல்) அவர்களிடம் உடன்படிக்கை செய்து கொள்கிருர்கள். உடன்படிக்கைக்கு முன் நாங் கள் தொழுகாமலிருப்பதற்கு உத்தரவு தாருங்களென அம்மக்கள் கோறுகின்றனர். அதற்கு பெருமானுர்(ஸல்) லாகைர பீ இதினின் லைச பீஹி ருகூஉன் ''தொழுகையில்லா மார்க்கத்தில் அந்தப்பயனுமில்லை'' என பதிலுரைத்தனர். பின் அம்மக்கள் இக்கடமையை ஏற்று இஸ் லாத்தைத் தழுவினர்.

முஸ்லிம்களே! மேற்கூறப்பட்ட விஷயங்களால் தொழுகையை இஸ்லாம் எவ்வளவு வுண்மையாக வற்புறுத்துகிறது என்பதை தெரிந்திருப்பீர்கள். இத்தகைய முக்கியமான கடமையை விட்டுவிட்டு தானும் முஸ்லிம் என்று கூறிக்கொள்வதில் எவ்விதபயனுமில்லை சிந்தித்து செயலாற்ற முயற்சிப்பீர்களா?

ஸிராஜுஸ் ஸாலிகீன்.

[கஸ்ஸாலி இமாம் (றஹ்) அவர்களுடையது]
தமிழ் மொழி பெயர்ப்பு.

வினா:— அடியான் தன்மீது விதிக்கப்பட்டுள்ள கடமைகளை யாவும் சரிவர நிறைவேற்ற வேண்டுமானால் அவன் ஜீவித்தலுக்குரிய காலம் அதாவது வயது அவனுக்கு போதுமானதில்லை. அவன் அடைய வேண்டிய கடமை பருவதத்தின் சிகரங்களோ வெகு தூரத்தில் எட்டியிருக்கின்றன, இதற்கான பதில்யாது?

விடை:— இதற்கானபதிலைக்கேளும். உண்மையில் சிகரங்கள் எப்படி யிருக்கின்றன, கடமைகளின் விதிகளும் கடினமானவைகளே. ஆனால் அல்லாஹுதஆலா யாதொரு அடியானை மேம்பாடுபடுத்த நாடுவானாகில் அவனுக் கெதிரில் உள்ள அப்பாதையின் நீளத்தை சுருக்கி விடுகிறான். அவன் கஷ்டத்தை இலகு படுத்தி விடுகிறான்.

சிகரத்தை அடைந்ததும் ஏறினவன்தானே "ஆ! எவ்வளவு சமீபமும் சுருக்கமுமான பாதை! இதற்கான வேலையும் எம்மட்டில் சுளுவானது" என்று ஆச்சரியமுற்று சொல்லத்துணிகிறான். எனவே, அல்லாஹு தஆலாவுடைய பிரத்யேக அருள் ஏற்படுங்கால் ஒருவன் 70 வருஷத்திலும், ஒருவன், 20 வருஷத்திலும், ஒருவன் 10 வருஷத்திலும், ஒருவன் ஒரே வருஷத்திலும், ஒருவன் ஒரே மாதத்திலும் ஒருவன் ஒரே வாரத்திலும், ஒருவன் ஒரே நிமிஷத்திலும் கூட அந்த அபாண்ட பாதையைக் கடந்து விடுகிறான்.

அஸ்ஹாபே கஹறப், தங்கள் பாதுஷாவான தக்யானூஸ் நிலைமையில் மாறுபாடு ஏற்பட்டபோது அவர்கள் ஆண்டவனை நோக்கி "நம்முடைய பரிபாலனே! நீ வானம் பூமியின் சிருஷ்டி கர்த்தனுவாய்" என்று மன்றாடி கேட்டபோது அவர்களுக்கு 'மாரிபத்' என்னும் மெய்ஞானம் அடையப் பெற்றது. அதன் மூலம், அவர்கள் அப்பாதைக்குரிய கஷ்ட சங்கடங்களை யறிந்து அதை கடந்து விட்டார்கள். அத்துடன் அவர்கள் தங்கள் வேலைகளை யாவும் அல்லாவுடைய பொறுப்பில் விட்டு விட்டமையால் அல்லாமீது தவக்கல் என்னும் பரிசுத்த நம்பிக்கையும் உறுதிப்பாடும் கொண்ட அரும் பெரும் உத்தமர் கோஷ்டியை யடைந்து போயினர், அவர்கள் அடைந்த ஸ்தலத்தின் அபாண்ட பாதையை அவர்கள் ஒரே நொடி நேரத்தில் கடந்து போயினர், என்பது குறிப்பிடத் தக்கது.

வினா:—அடியான் தனக்கு விதிக்கப் பட்டுப்போன கடமைகளை நிறைவேற்று வதற்காக எத்தனையோவித சாதனங்களின் அவசியத்

திற் குள்ளாகிருன், அரும்பாடு படுகிருன், என்னென்னமோ அமுலு களை மேற் கொள்ளுகிருன் ஏன்? பலனடைவதற்காக. ஆனுல் எல்லாம் ஆண்டவன் நாட்டப்படியே நடப்பதாயிருந்தால் அதை நினைக்கும் போது அவனுக்கு எவ்வளவு அச்சமும் மனக் கலக்கமும் ஏற்படுகின் றதே. அது எப்படி?

விடை:—உங்கள் பலன் உங்கள் விதிவசத்திற்கேற்ப கிடைக் கும். உங்கள் அனுஷ்டான அலுவல்கள் உண்மையில் பிரயாசைக் கொண்டவை. அல்லாஹ் சொல்லுகிருன் :– "யாம் மனிதனை துன்பத் தில் சிருஷ்டித்தோம்" நான் அறிந்திருப்பதை நீங்கள் அறிவீர்களாகில் உங்களுக்கு குறைந்த சிரிப்பும் அதிக அழுகையும் உண்டாகும்.

இதையொட்டி ஹஸ்ரத் அமீருல் மூமினீன் அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்கள் மொழிகிருர்கள்:—

"ஆ! அல்லாஹ் என்னை புல்லாக படைத்திருந்தால் எவ்வளவு நன்ருக இருந்திருக்கும். அப்புல் ஆனது கால்நடைகளுக்கு தீனியாக உபயோகப்பட்டிருக்கும்.

அடுத்தபடியாக, ஹஸ்ரத் பலீல் (ரஹ்) அவர்கள் கூறுகிருர்கள்:—

'நான் ஒரு மலக்கு (வானவர்) ஆகவோ அல்லது தெய்வீக தூதனுகவோ, அல்லது ஓர் உத்தம புருஷனுகவோ இருக்க வேண்டு மென ஆசைப்படவில்லை." "ஆனுல் நான் உலகில் படைக்கப் படாத ஒரு அடியானைப் போலாகிவிட வேண்டும். இதுவே என் விருப்பம்"

வினு :—அடியான், தன் மனதை வசப்படுத்துவது கடினமான காரியம் எனச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனுல் ஈமானை விபத்து அழிவு இவைகளை விட்டும் காத்து கதிமோக்ஷமடைவதற்கு மனதை சீர்படுத்த வேண்டாமா? அப்போதல்லவோ நல்லமுலுகளைச் செய்ய சாத்தியமாகும்?

விடை :—இந்த வினுவானது விரிவான விடையை வேண்டுகிறது. அறிவாளர்கள் இதைப் பற்றி பல்வேறு கிதாபுகளை இயற்றி அவைகளில் பலவாறு வரைந்துள்ளார்கள். நாம் இங்கு முக்கியமானதை குறிப் பிடுகிருேம்.

அதாவது மனதை சீர்படுத்தும் அம்சங்கள் 4 வகைப்படும் :—

(1) நம்பிக்கையை விசாலப்படுத்தல் (2) காரியத்தில் துரிதப் படுத்தல் (3) பொருமைக் கொள்ளல் (4) கர்வ மடைதல். இந்த 4 அம் சங்களை தவிர்த்து அவைகளுக்கு மாருக அடியான் கடை பிடிக்க வேண்டிய 4 நல்லம்சங்களாவன :—

(1) நம்பிக்கையை சுருக்கிக் கொள்வது (2) காரியத்தை பொறுத்துச் செய்வது (3) மக்களுக்கு நற்போதனை செய்வது (4) நல்லுபசாரம் செய்வது.

முதலில் கூறப்பட்டுள்ள 4 அம்சங்களினால் ஏற்படும் விபத்துகளை ஆராய்ந்தறிந்த பின்னர், . சுறுசுறுப்புடன் அவற்றை அகற்றத்தக்க வழியில் முயலுங்கள்.

நம்பிக்கையை நீடித்து அலுவல்களை ஒத்தி வைப்பதானது சகல தருமங்களுக்கும் இடையூருக்கும் சகல கெடுதிகளுக்கும் குழப்பங்களுக்கும் இதுவே முகாந்தரம். மக்களை பலவித துன்ப சங்கடங்களில் இது சிக்க வைக்கும். சகலவிதமான கெடுதிகளும் அழிவுகளும் இதனால் ஏற்படுதல் சகஜம். எனவே, உங்கள் நம்பிக்கையை விசாலப்படுத்திக் கொண்டு போவீர்களாகில் அதன் பொருட்டு அடியிற் கண்ட நான்கு வித விபத்துகள் ஏற்படும்.

(1) ஒருவன் இபாதத்தை விட்டகன்று சோம்பலின் காரணமாக 'என்ன இதற்குள் என் வயதாகி விட்டதா? இன்னும் எவ்வளவோ காலம் மீதியா யிருக்கிறது' என்று சொல்வது.

நம்பிக்கையை நீடித்து ஒத்தி வைப்பதானது சகல தருமங்களுக்கும் இடையூறுகும்.

(2) தவபாச் செய்வதில் காலதாமதம் செய்வது. எனக்கு இன்னும் எவ்வளவோ காலம் உண்டு. இதற்கிடை தவ்பாச் செய்து கொள்வேன். இப்போது நான் வாலிபன். வயது சொற்பம். நான் நினைத்த போது தவ்பாச் செய்து கொள்ள முடியும்.

இதற்கிடை மரணம் வந்து விடுமானால் சாத்தியப்படாமற் போகிறது. மரணம் வயதை பொருந்தி நிற்கவில்லை என்பது.

(3) பொருள் சேகரிக்கும் ஆசை. இதை சேகரிக்கும் வழியில் மறுமைக்குரிய கடமைகளை கைவிட்டு விடுவது. வயோதிகப் பருவத்தில் காலக்ஷேபத்திற்கு என்ன செய்வேன். அப்போது சம்பாதிக்கவோ என்னில் சக்தி யிராது. இப்போது போதிய வரையில் சம்பாதித்து ஏதேனும் பணம் மிச்சப்படுத்தி வைத்தாலன்றோ, நான் சிக்காய் விட்ட போதிலும் அது எனக்கு பிரயோஜனப்படும் என்பவைப் போன்ற அநேக எண்ணங்கள் மனதை உறுத்திக் கொண்டிருத்தல்.

(4) எவ்வளவுக் கெவ்வளவு நம்பிக்கை விசாலப்படுமோ மரணமும், கபுரும் (சமாதியும்) ஞாபகத்திற்கு வரமாட்டா. மனத் தூய்மையும் மனச் சாந்தமும் கபுரை நினைப்பதினாலேயே ஏற்படக்கூடும்.

மறுமைக்குரிய விஷயங்களை சிந்தித்துப் பார்ப்பதனாலேயே நன்மை தீமைக்குரிய இரகசியமும் ஞாபகத்தில் வரும். எந்த மனதில்

இந்த விஷய அம்சங்கள் குடி கொண்டிருக்கவில்லையோ அதில் தூய்மையும் சாந்தமும் எவ்வாறு தென்படக்கூடும்?

"அவர்கள் நம்பிக்கை நீண்டமையால் அவர்களின் மனங்களும் சீர்கேட்டை யடைந்தன" (திருக் குர்ஆன்)

இனாம்! இனாம்!!

ஹமீதிய்யா முஸ்லிம் காலண்டர் 1954

இங்கிலீஷ், தமிழ், அரபு ஆக மூன்று தேதிகளும் 3 கலர்களில் அச்சிடப்பட்டு, ஒரு மாதத்திற்கு ஒரு ஷீட்டாக 12 ஷீட்டுகள் அடங்கியுள்ளது. ஒவ்வொரு ஷீட்டிலும் தொழுகைகளின் நேரங்களாகிய அவ்காதுஸ்ஸலாத்தும் சேர்க்கப்பட்டுள்ளது.

எங்களிட மிருந்து ஒரே நேரத்தில் எங்களது சொந்த பிரசுரங்களுள் ரூபாய் 10க்கு குறைவில்லாமல் சொந்த உபயோகத்திற்கு கிதாபு, புஸ்தகம் தருவிப்பவர்களுக்கு ஷை காலண்டர் ஒன்று (எங்களிடம் காலண்டர் ஸ்டாக் யிருக்கும் வரை) இனாமாகச் சேர்த்து அனுப்பப்படும்.

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

நல்லுபதேசம்.

(அய்யம்பேட்டை S. அப்துர் ரஜாக் ஸாஹிப்)

ஆண்டவன் அச்சம் உண்மை பயபக்தி

நானும், சுல்தானுவும் ஒரே பாடசாலையில் வாசித்து வந்தோம். நான் என்றைக்காவது அவள் வீட்டிற்குப் போவதுண்டு. சுல்தான தாயார் அவளை என்னுடன் உட்கார்ந்திருக்கக் கண்டபோதெல்லாம் "ஆ! இவ்விருவர்களின் ஜோடி எவ்வளவு பொருத்தமாய் புலப்படு கிறது. ஆண்டவன் இவ்விருவர்களுக்கிடை இணக்கம் வைத்தே படைத் திருப்பான் போலும்" என்று பெருமூச்சை யிட்டுச் சொல்லுவார்.

நான் அவ்வமயம் சிறுவனு யிருந்த போதிலும் அவர் வார்த்தை களின் பொருளை அறிந்து கொள்வேன். சுல்தானு என்னுடையவள் என்ற கர்வத்துடன் நான் சில சமயங்களில் அவளுடன் கோபமாகவும் பேசி வருவேன். சுல்தானு என் கோப வார்த்தைகளை பொருட்படுத் தாமல் அன்புடனேயே நடந்து கொள்வாள்.

என் தகப்பனார் ஜமீன்தார். எனக்கு சொற்ப படிப்பு புகட்டினால் போதும் என்பது அவரது விருப்பம்.

ஆனாலோ என் நன்பர்களுள் பலர் உயர்தரக் கல்வி கற்று வந்தனர். பலர் பல உத்தியோகங்களிலும் அமர்ந்திருந்தார்கள். எனவே என் தந்தையின் ஆலோசனை எனக்கு பிடிக்காததால் நான் என் ஊரை விட்டு நேரடியாக கல்கத்தாவுக்குப் போய் கல்வி கற்க ஆரம்பித்தேன்.

கல்வி தேர்ச்சி யடைந்த பின்னர், உத்தியோகத்திற்குச் செல்ல வேண்டு மென்ற எண்ணம் மாறியது. தேச சேவையே பிரதானம் என்பதை உணர்ந்தேன்.

தேசத்திற்கும் சமூகத்திற்கும் தொண்டு புரிய வேண்டுமாயின் கலியாணமின்றி தனிப்பட்டிருப்பதே மேலான வழி என்ற ரகசியத்தை தெரிந்து கொண்டேன்.

நான் கலியாணம் செய்து கொள்வதை முற்றிலும் நிராகரித்து விட்டபடியால் என்னை சுல்தானுவுடன் கலியாணம் செய்ய காத்திருந்த சுல்தானுவின் தாயார் சிறிது காலத்திற்குப் பின் குர்ஷித் ஜமால் நாம முள்ள வாலிபருக்கு தம் பெண்ணை கொடுத்து விட்டார். மாப்பிள் ளைக்கு வக்கீல் தொழில்.

187025

நான் கலியாணத்தை நிராகரித்து விட்டதைப் பற்றி என் பெற்ருேருக்கும் சுல்தாஞ பெற்ருேருக்கும் என் பேரில் வருத்தமே. சுல்தாஞவுக்கு கலியாணமாய் விட்ட செய்தியை கேள்வி யுற்றேன். எனக்கு ஒருவித உணர்ச்சி ஏற்பட்டது. எனினும் நான் கடை பிடித் திருந்த கைங்கரியத்தின் ஊக்கம் எனக்கு அது சமயம் ஒருவாறு ஆறுதலளிக்கக் கூடியதாக விருந்தது.

நான் கல்வி பயின்று வருவதற்கிடையே என் தந்தை காலமாய் விட்டார். இனி நான் என் 2 சகோதரிகளேயும் பரிபாலிக்க வேண்டி யிருந்தது.

கலாசாலேயின் படிப்பை நிறுத்தி விட்டு பிழைப்பிற்கான யாதொரு வேலேயைத் தேட ஓடியாடித் திரிந்தேன். பெருங் கஷ்டத்திற்குப் பின் நோகாலி ஜில்லாவில் உள்ள ஒரு பாடசாலேயில் ஆசிரியஞக சேர்ந்தேன்.

பாடசாலேயில் கல்விப் பயிற்சியுடன் மாணவர்களுக்கு தேசாபி மானத் துறையிலும் போதிய பயிற்சி யளிக்க வேண்டுமென எவ்வளவோ முயற்சித்தேஞகிலும், ஊக்கமற்ற தலேமை ஆசிரியர், எனக்கு அது விஷயத்தில் இடங் கொடுக்கவில்லே. அதிலிருந்து எனக்குரிய ஊக்க மும் படிப்படியாக குன்றி விட்டது.

பள்ளிக்கூடக் கட்டிடம் நேர்த்தியும் கம்பீரத் தோற்றமும் படைத்தது, கட்டிடத்தைச் சுற்றியும் தென்னஞ் சோலேயும் பசுமை நிறைந்த வேப்ப மரங்களும் வெகு லக்ஷணமாக இருந்து வந்தன. அவற்றின் நிழலும் குளிர்ந்த மனதிற்கு உற்சாகத்தை தரக் கூடியனவா யிருந்தன, அதே விடத்தில் என் இருப்பிடமும் அமர்ந்திருந்தது. அல்லும் பகலும் நான் அங்கேயே இருந்து வருவேன்.

வக்கீல் குர்ஷீத் ஜமால்ஜாகைக் கட்டிடமும் என் பள்ளிக்கூடத் திற்கு சமீபமாகவே நிலே கொண்டுள்ளது.

வக்கீலே நானும் செவ்வனே அறிந்து வந்தேன். என் சிறு பிரா யத்தின் அருமைத் தோழியான சுல்தாஞவை மணந்து கொண்ட மண மகன், அவர் தான், என்பதும் எனக்கு பின்னர் தெரிய வந்தது.

சமீப வாசத்தின் காரணமாய் குர்ஷீத் ஜமாலோடு, என் சிநேக பான்மைக்குரிய சம்பந்தம் நாளடைவில் விருத்தி யடைந்து கொண்டே போயிற்று.

ஆயினும் நானும் சுல்தாஞவும் சிறுபிராயத்தில் எவ்வளவு நெருக்கடியான சம்பந்தம் கொண்டிருந்தோம் என்பது மட்டும் அவ ருக்குத் தெரிந்திருந்ததோ இல்லேயோ என்பதை நான் அறியேன்.

ஒரு நாள் நான் வக்கீலுடன் யாதொருவிஷயத்தைக் குறித்து பேசிக் கொண்டிருந்தேன், அப்போது எதிரில் உள்ள அறை வீட்டிலிருந்து இனியக் குரலில் பேசும் சத்தம் கேட்டது.

நான் சற்று அப்புறம் கண்ணெடுத்து பார்த்தபோது பிரீதி நிறைந்த இரண்டு கண்கள் என்னை உற்று நோக்குவதைக் கண்டேன். உடனே என் மனப்பிரிதியின்கடல் ஒருவாறு பொங்கி எழுந்தது, மறைந்து விட்டபழைய சரிதை என் ஞாபகத்திற்கு வந்தது.

என்னை ஆயாசத்துடன் உற்று நோக்கிய கண்களின் ஒளி மின்சார சக்தியைப் போல் என் உள்ளத்தை பரவசப்படுத்தியது. அதனால் எனக்கு சகிக்கொண்ணாத மனவேதனை உண்டாயிற்று.

நான் அப்பால் வீட்டிற்கு திரும்பி வந்தேன். ஆனாலோ என் மனதிற்கு நிம்மதி எங்கே.

ஏற்கனவே நான் எனமதிற்கு பல்வேறு புஸ்தகங்களை படிப்பதினாலும் இதர பல்வேறு அலுவல்களைச் செய்து வந்ததினாலும் ஒருவாறு தேற்றிவந்தேன். ஆனால் அந்நிகழ்ச்சிக்குப் பின்பு என் நற்சிந்தையே அற்றுப் போய் விட்டது.

அன்றிரவு படுக்கைக்குப்போனேன், நித்திரைவரவில்லை. "உன் சுல்தானா எங்கே" என்மனம் கேட்டது 'நான் அவளையோ மணந்து கொள்ளாது விட்டுவிட்டேன்' என்றேன் "விடப்பட்டுப்போனவள் மீண்டும் உன்னை அவ்வளவு பெரும் ஆயாசத்துடன் எதற்காக பார்த்திருக்க வேண்டும்" என்ற மற்ற தோர் கேள்வி பிறந்தது. "நீ சுல்தானாவை கண்ணெடுத்துப்பார்க்கவும் உரிமை வாய்ந்திருக்கவில்லை. உன் சிறுபிராயத்தின் அருமைக்காதலி உனக்கு இவ்வளவு சமீபித்திருப்பின் நீ அவளது இனியகுரலை மாத்திரம் கேட்கலாம். அவளது இன்பமான வாடை உனக்கு வீசக்கூடியதாயின் அதை நன்கு முகரலாம், அதை தவிர்ந்து உனக்கும் அவளுக்கு மிடை அபாண்ட தடுப்பாக நிறுவப்பட்டிருக்கும் சுவற்றையோ நீ சிறிதளவும் நகர்த்தமுடியாது" என்றது மீண்டும் என் ஆயாசம்.

அந்தோ ! இன்று எனக்கும் சுல்தானாவுக்கிடையோ எவ்வித சம்பந்தமும் இல்லாதிருந்தது. ஒரு காலத்தில் உலகவஸ்துக்களுக்கிடை அவளே எனக்கு எல்லாவற்றிலும் அதிக பிரியம் வாய்ந்தவள். எந்நேரமும் என் கண்களுக் கெதிரில் இருந்து வந்தவள். இன்று அவள் யாரோ நான் யாரோ என்று சொல்லக்கூடிய அளவில் ஓர் அன்னியனைப் போலாகி விட்டாள். அவளைப்பார்ப்பது குற்றம். அவள் தோற்றத்தை சிந்தையில் கொண்டுவருவதும் பாவம் என ஏற்பட்டு விட்டது.

நான் அவள் மாசற்ற அழகைக்கண்டு மனுறுதலடைந்து வந்தேன். இப்படி யெல்லாம் இருந்து வருகையில் யாரோ ஓர் அன்னியன் இருந் தாற்போலிருந்து வந்து கலியாண நிபந்தனைகளின் கீழ் அவளை சட்டுப்படுத்தி கொண்டு போய் விட்டான். ஆக இவ்வாறுன எண் ணங்களெல்லாம் என் மனதில் உதித்து என்உள்ளத்தை புண்படுத்தி யுள்ளன. உண்மையில் ஒருவன் தனக்கு பிடித்தமாயுள்ள அரிய தோர் பொருளை இழந்து விட்டபின்னரே அதன் அருமை யானது அவனை நினைக்கச் செய்கிறது.

பள்ளிக்கூடத்திய வேலை நேரங்கள் கழிந்தவுடன் நான் வீட்டுக்கு வருவேன். அவ்வேளை என்மனம் வெருண்டிருக்கும். தனிமை என்னை உறுத்தும்.

இப்போதைய உணர்ச்சி எனக்கு முன்னரே ஏற்பட்டிருந்தால் நான் சுல்தானுவையே மணந்து என் விருப்பத்திற்கு இடமளித் திருப்பேன். தேசதொண்டின் ஊக்கம் மேலிட்டிருந்தமையால் அச் சமயம் அதை தவிர்க்க வேண்டிய தாயிற்று.

"ஆ! சுல்தானு! உன் இன்பவார்த்தைகளைக் கொண்டு நீ என் உள்ளத்தை பூர்த்திக்கச்செய்து வந்தாயே! இப்போது நான்படும் அவஸ்தை உனக்குத் தெரிகிறதா?" என்றெல்லாம் புலம்பினேன். ஒரு நாள் வக்கீல் குர்ஷீத் ஜமால் தம் தொழிலின் அலுவலின்பேரில் வெளியூருக்குச் சென்றுர். அவ்வமயம் நான் என்ஜாகையில் தனித்தி ருந்ததுபோலவே, சுல்தானுவுக்கும் அவள் வீட்டில் தனித்திருக்க நேரிட்டது.

வானத்தில் அளவிறந்தமப்பும் மந்தாரமும் சஞ்சரிக்கலாயின. இருள் காலத்தில், மந்தார இருள் வேறு மனதை கலக்கமுறச் செய்தது. இடைவிடாத கனத்த மழையும் கடுமையான புயல் காற்றும் அடிக்க ஆரம்பித்தது. வெள்ளம் திரண்டு வர, கண்டவிடமெல்லாம் வெள்ளக் காடாகிவிட்டது. இப்படி யிருக்க,

இரவு 10மணி புயலின் கடுமையோ விவரிப்பதற்கில்லை. வானமும் பூமியும் சேர்ந்தாற்போல் ஏககாலத்தில் ஜலத்தை கக்குவதாகவே நினைக்கவேண்டியிருந்தது.

சுல்தானு வசித்துவந்த வீடு என் பள்ளிக்கூடத்தின் கட்டிடத்திற் கெதிரில் அவ்வளவு உறுதியான தன்று. பயங்கரமான இந்த சமயத்தில் தனித்திருக்கும் சுல்தானுவையும் இக்கட்டிடத்திற்குஅழைத்துவரலாமா என்ற எண்ணமும்எனக்கு வந்தது. ஆனுல் தனித்திருக்கும் அவளிடம் அதைப்பற்றி கேட்க என் மனம் துணியவில்லை. சுல்தானுவை அழைத்து வரலாமா வேண்டாமா என்று யோசனை செய்வதற்கிடையே இரவு 1½ மணியாகிவிட்டது.

வெள்ளப் பெருக்கின் சப்தமோவெனில், சமுத்திர அலைகளே பொங்கிவந்து மலைகளுடன் மோதுவதாக நினைக்கவேண்டியிருந்தது. நேரம்போகபோக வெள்ளம் உயர்ந்து கொண்டுபோய் மக்களை ஆழ்த்தி விடுமோ என்ற திகிலேற்பட்டதும் நான் தட்டுதடுமாறி சுல்தானு ஜாகையை நோக்கிச்சென்றேன். ஆ! நீண்ட காலத்திற்குப் பின்னர் நானும் சுல்தானுவும் எதிருக்கெதிரில், சமீபித்து விட்டோம். ஒருவர் மற்றொருவரை அறிந்துகொண்டோம். வெள்ளப் பெருக்கு எட்டாத தோர் உயரமான விடத்தில் நாங்கள் இருவரும்போய் ஒதுங்கி நிற்க நேர்ந்தது.

சோதனை நேரம்

ஆண்டவன் பயபக்தி யின் உணர்ச்சி

அடர்ந்த இருள் அக்கம்பக்கம் ஒருவரும் இல்லை. நீண்ட காலத் திற்கு பின் நாம் ஒருவரை யொருவர் சந்திக்க முடிந்த சந்தர்ப்பம் ஒருபக்கம் வெள்ளத்தின் அலைகள் மோதிக்கொண்டிருக்கையில் மற் றொரு புறத்தில் இருவரின் பாலிய அன்பும் காதலும் மின்சார சக்தி யைப்போல் ஒன்றோடொன்று மோதிக்கொண்டிருக்கின்றன.

சுல்தானு நின்றவிடத்தில் அசையாது நிற்பதுபோலவே நானும் என் இடத்தில் அசையாது பிரமித்துப்போய் நிற்கிறேன். இவ்வமயம் மனம்படும்பாடு குறிப்பிடத்தக்கது. வாய்ப்பேசாது நான் மௌனஞ் சாதித்து நிற்பதுபோலவே சுல்தானு நிலைமையும் இருந்துவருகிறது. எங்கள் பேசும் சக்தியை தெய்வீக சக்தி கிரகித்துக் கொண்டதாகவே சொல்லலாம். இடைஇடையே இருந்தாற்போ லிருந்து மின்னல் மினுக் குகிறதாகில் சுல்தானுவின் ஆயாசப்பார்வையால் வாடிப்போகிறேன்.

இச்சந்தர்ப்பத்தில் சுல்தானு உலகத்தை விட்டும் பிரிந்து தன் பாலிய நட்பின் காதலை முற்றிலும் என்பக்கம் சாய்த்து நிற்கிறாள்.

இவ்வேளை அவளுக்கு என்னைத் தவிர வேறு அனுதாபி கிடை யாது. உலக சுழற்சியின் பயனாக என் சிறு பிராயத்தின் பிராணதோழி என்னை விட்டுப் பிரிந்துபோயிருந்தாளாயினும் தற்செயலாக அவள் முன்போல் எனக்கருகில் வந்திருக்க நேரிட்ட சந்தர்ப்பத்தாலும் அவள் தன் முகலக்ஷணத்துடன் என்மனதில் எய்திய விசுவாச அம் பின் உணர்ச்சியினாலும் பூரித்துவிட்டேன்.

பயங்கரமான இந்த இரவில் மனிதர்கள்மட்டுமல்லாது சகல ஜீவ ஜந்துக்களும் மழைகாற்றுக்கு பயந்தும் ஒளிந்தும் அது எப்பொழுது விடும் என எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கையில், நானும் சுல்தானு வுமே அதற்கு மாறாக இருந்தோம். "நாம் இருவரும் ஒன்றுகூடி யிருப்பதற்காக இக்காற்றும் மழையும் இப்படியே இறுதிநாள்வரையில்

விடாதிருக்கலாகாதா!" இதுவே என் உள்ளன்பின் வேண்டுதலாக இருந்து வந்தது.

மின்னல் வெளிச்சத்தில் நான் மீண்டும் சுல்தானுவை உற்று நோக்கியபோது அவள் கண்களிலிருந்து முத்துகளைப் போன்ற கண்ணீர் சொட்டுகள் விழக் கண்டேன்.

என் மனம் கலங்கிவிட்டது. சகிப்புத் தன்மை என்னைவிட்டும் அகன்றது. உடனே அவளிடஞ் சென்று, அவள் கண்களைத் துடைத்து அணைத்த கரங்களுடன் ஆறுதலளிக்க எண்ணினேன்.

ஆனுல், ஷைத்தான் கலக்கம் ஏற்படும்படியான இச்சமயத்தில் என் உள்ளத்தில் அல்லாவுடைய பயபக்தி உதித்தது.

"ஜாக்கிரதை! சுல்தாறு உன் தோழி என்ருல்தான் என்ன? இப்போது அவள் மற்றொருவனுக்கு மணஞ் செய்விக்கப்பட்டு விட்டாள். நீ அவளைத்தொடுதல் ஹராமாகும், ஹராமுக்குரிய தண்டனையை நீ அறிந்திருக்கிருய்"

இந்த பரிசுத்த எண்ணம் வந்தவுடன் நான் அவளை யணுகாது நின்றேன்.

விடியற்காலை நேரம் மழையுடன் கூடிய புயல் காற்று நின்றது. சுல்தானு தன் வீட்டை நோக்கி ஓடினுள். அவள் ஓட்டத்தை நான் என் ஆத்மாவின் ஓட்டம் என்றே நினைக்க நேர்ந்தது.

அப்பால் நான் என் உயிரிழந்த ஜடலத்துடன் என் ஜாகை யடைந்தேன். என் ஆயுள் முழுவதிலும் எனக்கு சுகானுபவம் வாய்ப் பெற்ற இரவு இந்த ஒரே இரவாகத்தான் இருந்ததென்று சொல்லத் தகும்.

வயோதிக தந்தையின் புத்திமதி
வாலிப பருவத்தை வீணுக்காதே

என் அருமைப் புதல்வர்களே! நீங்கள் என் இருதயத் துண்டுகளுக் கொப்பாவர். நான் என் கண்களின் ஒளியும், உண்மை உற்சாகமும் உங்கள் நல்ல நிலைமையைக்கண்டே அடையப் பெறவேண்டும். போங்கள், சந்தோஷ வாழ்க்கையின் நல் வழிகளைத் தேடுங்கள். உங்கள் தந்தையாகிய நான் வயோதிகத்தை அடைந்துவிட்டோம். என் உரோமங்கள் வெளுத்துப் போயின. என் சக்தியும் குன்றிவிட்டது. இனி நீங்கள் என்னையே நம்பி யிருக்கவேண்டாம். என் இரத்தத்தின் கொதிப்பு அடங்கிவிட்டது.

உங்கள் இரத்தம் சூடாக யிருக்கிறது. அதன் ஆதரவில் நீங்கள் எண்ணிறந்த நற் பயன்களை அடையலாம். அதை நற்கருமங்களின் மூலம் நீங்கள் சோதனை செய்யுங்கள். இதுவே தக்கசமயம்.

நீங்கள் இப்பருவத்தை வீண்போக்கி விடுவீர்களாகில் வீணே வருந்த நேரிடும்.

உலக ஆடம்பரக் காட்சிகளைக்கண்டு மயங்க வேண்டாம். இவை ஒன்றும் உங்களுக்கு பலனளிக்கப் போவதில்லை.

ஆகையால், நற்பாதையி லிறங்கி பாடுபட்டு நற்கீர்த்தி அடையுங்கள்.

காலி கோரி கிஸ்ஸா

(கருத்தவள் சிவத்தவள் இருவரின் தர்க்க வரலாறு)

எல்லாம் வல்ல ஆண்டவனின் சிருஷ்டிப் பொருள்களில், மானிட வர்க்கத்திலும் ஏனைய வர்க்கத்திலும் ஜோடி ஜோடியாக யிருப்பதை நாம் காண்கிறோம். ஆணுக் கெதிரில் பெண்ணைப் படைத்திருப்பதை போன்று, கறுப்புக்கு எதிராக வெள்ளையை உண்டாக்கி யிருக்கிறான். ஆனால் நாயன் எதை எந்த அமைப்பிலும் நிறத்திலும் படைத்திருக்கிறானோ அதில் நாம் அற்ப சொற்ப குறையேனும் கூறமுற்படுவோமாகில் அது நம்முடைய அறியாமை, மதியீனத்தையே வெளிப்படுத்து வதாகும். இச் சிறு புஸ்தகத்தில் உள்ள கதை அதற்கு சான்றாகும். இந்த கதை இரு ஸ்திரீகளைப் பற்றியதாகும். ஆதலால் இதை ஆடவர்கள் பொதுவாயும் ஸ்திரிகள் குறிப்பாகவும் படித்தறிய வேண்டியது அத்தியாவசியமாகும். இதன் விலை அணா 4

கிடைக்குமிடம்,—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

187025

விகடத் துண்டுகள்.

வெகு காலத்திற்கு முன்பு ஒரு மாடு மேய்ப்பவன் இருந்தான். அவன் எந்த மாட்டு மந்தையையும் ஒரு முறை கண்ணுற்று பார்ப்பான். மூன்று வினாடிக்குள் அந்த மந்தையில் எத்தனை மாடுகள் இருக்கின்றன என்று சொல்லிவிடுவான்.

அவன் இருந்த அந்த இடத்திற்கு அயலானொருவன் ஆயிரக் கணக்கான ஏக்கர் மேய்க்கும் நிலங்களை வாங்கி அவைகளை மாடுகளைக் கொண்டு நிறப்பினான். எண்ணிச் சொல்லும்படியான இந்த மாடு மேய்ப்பவனைப் பற்றி கேள்விபட்டு, அவனை ஒரு சிறு மலையின் மேல் அழைத்துச்சென்று தன் மாடுகளை காண்பித்து, அயலான், "அந்த மந்தையில் எத்தனை மாடுகள் இருக்கின்றன என்று உன்னால் சொல்ல முடியுமா?" என்றான்.

"பதினேறு நூறும் ஐந்தும்" என்றான். ஆச்சரியத்துடன், "அது சரிதான். மலைக்கு அடுத்த பக்கம் போவோம். அதோ அந்த மந்தையில் எத்தனை இருக்கின்றன என்று உன்னால் யூகிக்க முடிகிறதா என்று பார்ப்போம்" என்றான் அயலான்.

"யூகித்து சொல்லுகிறதில்லை. அவைகள் எத்தனை என்று சரியாகத்தான் நான் சொல்லுகிறது" என்று சொல்லிக்கொண்டே மலைக்கு அடுத்த பக்கம் போனான்.

"இங்கு அதிகமான மாடுகள் இருக்கின்றன. இவைகள் பதினைந்துநூறும் இருபத்தினாலும் இருக்கின்றன. இருபத்தினாலு இல்லை இருபத்திஐந்து" என்றான் மாடுமேய்ப்பவன்.

"அப்பாடா எப்படி உங்களால் அவ்வளவு சரியாக சொல்ல முடிகிறது?" என்றான் அயலான்.

"இது ஒன்றும் கஷ்டம் இல்லை. நான் அவைகளின் கால்களை எண்ணுகிறேன். அதை நாலால் வகுக்குகிறேன்"

தாயார் (சிறிய மகனிடம்:) உன் மண் கைகளை வைத்துக்கொண்டு கதவை திறந்ததினாலே கதவெல்லாம் மண் கை அடையாளமாய் விட்டதே.

மகன்: அவைகள் என் மண் கை அடையாளமாகவே இருக்காது. நான் எப்போ கதவை திறந்தாலும் காலால் உதைத்தல்லவோ திறப்பேன்.

Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.